University of Madras

Intermediate Examination
In Arts & Science,

1938.

PART II — Tamil

Selections in Poetry.

REGISTRAR OF BOOKS
17 AUG 1937
MADRAS

PRINTED AT THE 'TAMIL KADAL' PRESS
SAN THOME, MADRAS

1936

பொருளடக்கம்

		பக்கம்
I	புறநானூறு	1
	குறிப்புரை	53
II	ஆசாரக்கோவை	4
	குறிப்புரை	58
III	கம்பராமாயணம்	6
	குறிப்புரை	60
IV	வில்லிபுத்தூரார் பாரதம்	22
	குறிப்புரை	72
V	அழகரந்தாதி	32
	குறிப்புரை	79
VI	நீதி நெறி விளக்கம்	36
	குறிப்புரை	83
VII	நால்வர் நான்மணி மாலை	39
	குறிப்புரை	88
VIII	செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்	45
	குறிப்புரை	91
IX	ஸ்ரீமத் குமாரசுவாமியம்	51
	குறிப்புரை	97

I

புறநானூறு

1. பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

திணை - பொதுவியல்.
துறை - பொருண்மொழிக் காஞ்சி.

நரிவெரூஉத் தலையார் பாடியது.

2. காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்

யானை புக்க புலம் போலத்
தானு முண்ணு னுலகமுங் கெடுமே.

திணை - பாடாண்டிணை.
துறை - செவியறிவுறூஉ.

அறிவுடை நம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் பாடியது.

3. சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

திணை - வாகை.
துறை - ஏருண் முல்லை.

காவற் பெண்டின் பாட்டு.

4. மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்

ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

திணை - பாடாண்டிணை.

துறை - பரிசில் விடை.

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைக் கண்டு, அவன்தன் வாள்கொடுப்பக் கொண்டுவந்து, இளங்குமணற்குக் காட்டிப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது

5. குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே

திணை - பொதுவியல்

துறை - முதுமொழிக்காஞ்சி.

சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு போர்ப்புறத்துப் பொருது, பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று, பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு.

ஆசாரக்கோவை

1. நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.

2. வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.

3. உடுத்தலால் நீராடா ரொன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்று மவைபுகா ரென்பதே
முந்தையோர் கண்ட முறை.

4. பொய்குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பின்
ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடும்
தெய்வமுஞ் செற்று விடும்.

5. படிறும் பயனிலவும் பட்டி யுரையும்
வசையும் புறனும் உரையாரே யென்றும்
அசையாத வுள்ளத் தவர்.

6. விரைந்துரையார் மேன்மே லுரையார் பொய்யாய
பரந்துரையார் பாரித்துரையார் — ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி யறிந்து.

7. துன்பத்துள் துன்புற்று வாழ்தலும் இன்பத்துள்
இன்ப வகையா னொழுகலும் — அன்பின்
செறப்பட்டா ரில்லம் புகாமை யிம்மூன்றும்
திறப்பட்டார் கண்ணே யுள.

8. அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமு மென்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனவென் றெண்ணி
இகழி னிழுக்கந் தரும்.

9. முறுவ லினிதுரை கானீர் மணைபாய்
கிடக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்
கூட்டுண்டு செய்யுஞ் சிறப்பு. [றார்க்

10. தன்னுடம்பு தாரம் அடைக்கலந் தன்னுயிர்க்கென்
றுன்னித்து வைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க
அன்றே விழுமந் தரும். [வுய்க்காக்கால்

11. உடைநடை சொற்சோர்வு வைதலிந் நான்கும்
நிலைமைக்குங் கல்விக்கும் ஆண்மைக்குந் தத்தம்
குடிமைக்குந் தக்க செயல்.

12. நஞ்சுதெறும்பு தூக்கணம் புள்காக்கை யென்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும்.

III

கம்பராமாயணம்

(அயோத்தியா காண்டம்)

மந்திரப் படலம்

1. வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ
தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும்
புறனு முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை
யிழைப்பக் கோற்றுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண்
டீர்த்த கழல்வேந்தே.

வேறு

2. மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்னமூ லத்தினிற் கழற வந்தென
மின்னிருங் கருமைபோய் வெளுத்த தோர்மயிர்.

3. தீங்கிழை யிராவணன் செய்த தீமைதான்
ஆங்கொரு நரையதா வணுகிற் றுமெனப்
பாங்கில்வந் திடுநரை படிமக் கண்ணடி
யாங்கதிற் கண்டன னவனி காவலன்.

4. மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பரும யானையான்
கண்ணுறு கவரியங் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினன்.

5. புக்கபி னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பரிவி னீக்கினன்
ஒக்கநின் றுலகளித் தியோகி னெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னயினன்.

6. சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
யந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான்
இந்திரற் கிமையவர் குருவை யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் றேவினன்.

7. பூவரு பொலங்கழற் பொருவின் மன்னவன்
காவலி னணையின் கடவு ளாமெனத்
தேவரு முனிவரு முணருந் தேவர்கள்
மூவரி னல்வன முனிவந் தெய்தினன்.

8. குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினர்
நலமுத னலிவினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினர்.

வேறு

9. உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு
ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு
மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ
ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா
வனைய நீரார்.

10. காலமு மிடனு மேற்ற கருவியுந்
தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுணித்தறந்
துணித்த மேலோர்

சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந்
தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப்
பயக்கு நீரார்.

11. தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன்
வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்
றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார்
தெரியுங் காலம்
மும்மையு முணர வல்லா ரொருமையே
மொழியு நீரார்.

வேறு

12. நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியில்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார்.

13. அறுபதி னாயிர ரேனு மாண்டகைக்
குறுதியி லொன்றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினர்.

14. முறைமையி னெய்தினர் முந்தி யந்தமில்
அறிவனை வணங்கித்தம் மரசைக் கைதொழு
திறையிடை வரன்முறை யேறி யேற்றசொல்
துறையறி பெருமையா னருளுஞ் சூடினர்.

15. அன்னவ னருளமைந் திருந்த வாண்டையின்
மன்னவ னவர்முக மரபி னேக்கினன்
உன்னிய தரும்பெற லுறுதி யொன்றுள
தென்னுணர் வினையநீ ரினிது கேண்மென.

16. வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னொருமுறை திறம்ப லின்றியே
வையம்யா னுண்டவாண் டுங்கண் மாட்சியால்
ஐயமி லறுபதி னுயி ரம்மரோ.

17. கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்
தன்னையித் தகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்.

18. விரும்பிய மூப்பெனும் வீடு கண்டயான்
இரும்பிய லனந்தனு மிசைந்த யானையும்
பெரும்பெயர்க் கிரிகளும் பெயரத் தாங்கிய
அரும்பொறை யினிச்சிறி தாற்ற வாற்றலேன்

19. நங்குலக் குரவர்க ளவையி னீங்கினர்
தங்குலப் புதல்வரே தரணி தாங்கப்போய்
வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினர்
எங்குலப் புறுவரென் றெண்ணி நோக்குகேன்.

20. வெள்ளநீ ருலகினில் விண்ணி னகரில்
தள்ளரும் பகையெலாந் தவிர்த்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காம மாதியாம்
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வனோ.

21. பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொள
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை யேறிய
அஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதோ.

22. ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தெட்டவ ரல்லரேற் செல்வ மீண்டென
விட்டவ ரல்லரே வியாவர் வீடுளார்.

23. இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கு
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ.

24. அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழித்
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினியதி யாவதே.

25. இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
துனிவரு நலனெனத் தொடர்ந்து தோற்கலா
நனிவரும் பெரும்பகை நவையி னீங்கியத்
தனியர சாட்சியிற் றூழு முள்ளமே.

26. உம்மையா னுடைமையி னுலகம் யாவையுஞ்
செம்மையி னேம்பிநல் லறமுஞ் செய்தனென்
இம்மையி னுதவிநல் லிசைந டாயநீர்
அம்மையு முதவுதற் கமைய வேண்டுமால்.

27. இழைத்ததீ வினைதனைக் கடக்கு மெண்ணுறத்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னருமேல்
குழைத்ததோ ரமிர்தினைக் கோட னீக்கிவே
றழைத்ததீ விடத்தினை யருந்த லாவதோ.

28. கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவ தின்ப மாகுமோ.

29. மைந்தரை யின்மையின் வரம்பில் காலமும்
நொந்தன னிராமனென் னேவை நீக்குவான்
வந்தன னினியவன் வருந்த யான்பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி யெண்ணினேன்.

30. இறந்திலன் செருக்களத் திராமன் ரூதைதான்
அறந்தலை நிரம்பமூப் படைந்த பின்னரும்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டாயபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ.

31. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகண் மணவினை தெரியக் கண்டயான்
அருமக ணிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகண் மணமுங்கண் டுவப்ப வுன்னினேன்.

32. நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையுஞ்
சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்
உவப்புறு கணவனை யுயிரி னெய்திய
தவப்பயன் ரூழ்ப்பது தரும மன்றரோ.

33. ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென வினைய கூறினன்.

வேறு

34. திரண்ட தோளின னிப்படிச் செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

35. அன்ன ராயினு மரசனுக் கதுவல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னு மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
யென்ன வுன்னியும் விதியது வலியினு மிசைந்தார்.

36. இருந்த மந்திரக் கிழவர்த மெண்ணமு மகன்பால்
பரிந்த சிந்தனை மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
தெரிந்து நான்மறைத் திசைமுகன் மகனிவை செப்பும்.

37. நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
கரும மேயிது கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ
தரும மும்மிது தக்கதே நினைத்தனை தகவோய்.

38. புண்ணி யந்தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
வண்ண லேயினி யருந்தவ மியற்றவு மடுக்கும்
வண்ண மேகலை நிலமகண் மற்றுனைப் பிரிந்து
கண்ணி முந்தில ளெனச்செயு நீதந்த கழலோன்.

39. புறத்து நாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லால்
பிறத்தி யாவையுங் காத்தவை பின்னுறத் துடைக்குந்
திறத்து மூவருந் திருந்திடத் திருத்துமத் திறலோன்.

40. பொன்னு யிர்த்தபூ மடந்தையும் புவியெனுந் திருவும்
இன்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற விராமன்
தன்னு யிர்க்கென்கை புல்லிது தற்பயந் தெடுத்த
உன்னு யிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலா முரவோய்.

41. வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னல்வரு மிடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார்.

42. மண்ணி னுநல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணி னுநல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணி னுநல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணு நீரினு முயிரினு மவனையே யுவப்பார்.

43. மனிதர் வானவர் மற்றுள்ளோ ரற்றங்காத் தளிப்பார்
இனியிம் மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
அனைய தைவி னரசனிற் குறுபொரு ளறியிற்
புனித மாதவ மல்லதொன் றில்லெனப் புகன்றான்.

44. மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடிக்குமப் பெருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னுனன்.

45. அனைய தாகிய வுவகையன் கண்கணீ ரரும்ப
முனிவன் மாமலர்ப் பாதங்கண் முறைமையி னிறைஞ்சி
இனிய சொல்லினை யெம்பெரு மானருள் வழியின்
தனிய னுனிலந் தாங்கிய தவற்கிது தகாதோ.

46. எந்தை நீயுவந் திதஞ்சொல வெங்குலத் தரசர்
அந்த மில்லரும் பெரும்புக ழவனியி னிறுவி
முந்து வேள்வியு முடித்துத்தம் மிருவினை முடித்தார்
வந்த தவ்வரு ளெனக்குமென் றுரைசெய்து மகிழ்ந்தான்.

47. பழுதின் மாதவன் பின்னுன்றும்
பணித்தில னிருந்தான்
முழுது மெண்ணுறு மந்திரக்
கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய விங்கித
மிறைமகற் கேற்கத்
தொழுத கையினன் சுமந்திரன்
முன்னின்று சொல்லும்.

48. உறத்த குமர சிராமற்கென்
றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு
நின்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை
மறப்பதும் வழக்கன்
றறத்தி னுங்கினிக் கொடிதென
லாவதொன் றியாதோ.

49. புரசை மாகரி நிருபர்க்கும்
புரத்துறை வோர்க்கும்
உரைசெய் மந்திரக் கிழவர்க்கு
முனிவர்க்கு மகிழ்வாய்
முரச மார்ப்பநின் முதன்மணிப்
புதல்வனை முறையால்
அரச னாக்கிப்பின் னப்புறத்
தடுத்தது புரிவாய்.

50. என்ற வாசகஞ் சுமந்திர
னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை
நளிமுடி சூட்டி
நின்று நின்றது செய்வது
விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள்
கொழுநனை யென்றான்.

51. அலங்கன் மன்னனை யடிதொழு
தவன்மன மனையான்
விலங்கன் மாளிகை வீதியின்
விரைவொடு சென்றான்
தலங்கள் யாவையும் பெற்றென
னுமெனத் தளிர்ப்பான்
பொலங்கொ டேரோடு மிராகவன்
றிருமனை புக்கான்.

52. பெண்ணி னின்னமு தன்னவ டன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
அண்ண லாண்டிருந் தானழ கருநற வெனத்தன்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான்

53. கண்டு கைதொழு தையவிக்
கடலுடைக் கிழவோன்
உண்டொர் காரியம் வருகென
வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன்
பொருக்கென வெழுந்தோர்
கொண்டல் போலவன் கொடிநெடுந்
தேர்மிசைக் கொண்டான்.

54. முறையின் மொய்ம்முகி லெனமுர சார்த்திட மடவார்
இறைக ழன்றுசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமு டிந்ததென் றார்த்திடக் குஞ்சியைச் சூழ்ந்த
நறைய லங்கல்வண் டார்த்திடத் தேர்மிசை நடந்தான்

55. பணைநி ரந்தன பாட்டொலி நிரந்தன வனங்கன்
கணைநி ரந்தன நாணொலி கறங்கின நிறைப்பேர்
அணைநி ரந்தன வறிவெனும் பெரும்புன லணையார்
பிணைநி ரந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

56. நீளெ ழுத்தொடர் வாயினுங் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்தினோ டரமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகண் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்.

57. மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
அண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கல்
தொண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் தொடர்ந்த
கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடுங் கிடந்த.

58. ஆய தவ்வழி நிகழ்தர வாடவ ரெல்லாம்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்பத்
தூய தம்பியும் தானுமச் சுமந்திரன் றேர்மேல்
போய கங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான்.

59. மாதவன்றனை வரன்முறை வணங்கிவா ளுழவன்
பாதபங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திடக் கவிர்வாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்.

60. நலங்கொள் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிநீர்
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கல் மார்பையுந் தனதுதோள் மார்புகொண் டளந்தான்.

61. ஆண்டு தன்மருங் கிரீஇயுவந் தன்புற நோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவன் பெரும்புகழ் குறுக
நீண்ட தோளினுய் நிற்பயந் தெடுத்தயா னின்னை
வேண்டி யெய்திட விரைவதொன் றுளதென விளம்பும்.

62. ஐய சாலவு மலசின னரும்பெரு மூப்பும்
மெய்ய தாயது மேவிடப் பெரும்பரம் விசித்த
தொய்யன் மாநிலச் சுமையுறு சிறைதுறந் தினியான்
உய்ய லாவதொர் நெறிபுக வுதவிட வேண்டும்.

63. உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
இருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை
தரும மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
கரும மென்வயிற் செய்யிலென் கட்டுரை கோடி.

64. மைந்த நங்குல மரபினின் வந்தருள் வேந்தர்
தந்த மக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க
ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
உய்ந்து போயின ரூழிநின் றெண்ணினு முலவார்.

65. முன்னை யூழ்வினைப் பயத்தினு முற்றிய வேள்விப்
பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற் பெற்றேன்
இன்னம் யானிந்த வரசிய லிடும்பையி னின்றால்
நின்னை யீன்றுள பயத்தினி னிரம்புவ தியாதோ.

66. ஒருத்த லேப்பரத் தொருத்தலேப் பங்குவி னூர்தி
எருத்தி னீங்குநின் றியல்வரக் குழைந்திட ருழக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவீ தருளிட வேண்டும்.

67. ஆளு நன்னெறிக் கமைவரு மமைதியின் ரூக
நாளு நங்குல நாயக னறைவிரி கமலத்
தாளி னல்கிய கங்கையைத் தந்துதந் தையரை
மீள்வி லின்னுல கேற்றின னெருமகன் மேனள்.

68. மன்னர் வானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவந் தொடங்கினோன் பிழைத்தவர் பிறரார்
சொன்ம ரூமகற் பெற்றவ ரருந்துயர் துறந்தார்.

69. அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொளல் வேண்டா
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினைய வேண்டும்யா னின்வயிற் பெறுவதீ தென்ருன்.

70. தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றே
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்ருன்.

71. குரிசில் சிந்தையை மனக்கொண்ட
கொற்றவெண் குடையான்
தருதி யிவ்வர மெனச்சொலி
யுயிருறத் தழுவிச்
சுருதி யன்னதன் மந்திரச்
சுற்றமுஞ் சுற்றப்
பொருவின் மேருவும் பொருவருங்
கோயில் போய்ப் புக்கான்.

72. நிவந்த வந்தணர் நெடுந்தகை மன்னவர் நகரத்
துவந்த மைந்தர்கண் மடந்தைய ருழையுழை தொடரச்
சுமந்தி ரன்றடந் தேர்மிசைச் சுந்தரத் திரடோள்
அமைந்த மைந்தனுந் தன்னெடுங் கோயில்சென் றடைந்தான்.

73. வென்றி வேந்தரை வருகென வுவணம் வீற் றிருந்த
பொன்றி ணிந்ததோட் டரும்பெற லிலச்சினை போக்கி
நன்று சித்திர நளிமுடி கவித்தற்கு நல்லோய்
சென்று வேண்டுவ வரன்முறை யமைக்கெனச் செப்ப.

74. உரிய மாதவ னௌ்ளிதென்
றுவந்தனன் விரைந்தோர்
பொருவி றேர்மிசை யந்தணர்
குழாத்தொடும் போக
நிருபர் கேண்மின்க ளிராமற்கு
நெறிமுறை மையினல்
திருவும் பூமியுஞ் சிந்தையிற்
சிறந்தன வென்ருன்.

75. இறைவன் சொல்லெனு மின்னற
வருந்தினர் யாரும்
முறையி னின்றிலர் முந்துறு
களிப்பிடை மூழ்கி
நிறையு நெஞ்சிடை யுவகைபோய்
மயிர்வழி நிமிர
உறையும் விண்ணக முடலொடு
மெய்தின ரொத்தார்.

76. ஒத்த சிந்தைய ருவகையி னொருவரி னொருவர்
தத்தமக் குற்ற வரசெனத் தழைக்கின்ற மனத்தார்
மூத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த நன்றென வன்பினே டறிவிப்ப தானர்.

வேறு

77. மூவெழு முறைமையெங் குலங்கண் முற்றுறப்
பூவெழு மழுவினற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காவவிவ் வுலகமீ தறனெனன் றூரரோ.

78. வேறிலா மன்னரும் விரும்பி யன்னது
கூறின ரதுமனங் கொண்ட கொற்றவன்
ஊறிய வுவகையை யொளிக்குஞ் சிந்தையான்
மாறுமோ ரளவைசால் வாய்மை கூறினன்.

79. மகன்வயி னன்பினன் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவிப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததெத் தன்மையா லென்றான்.

80. இவ்வகை யுரைசெய விருந்த வேந்தவை
செவ்விய நின்றிரு மகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க் கவ்வவ ராற்ற வாற்றுறும்
எவ்வமி லன்பினை யினிது கேளென.

81. தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையும்
மானவ வெவையுநின் மகற்கு வைகுமால்
இனமில் செல்வம்வந் தியைக வென்னவே.

82. ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவும் கழனி வாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார்.

83. பனையவா நெடுங்கரப் பரும யானையாய்
நினையவாந் தன்மையை நிமிர்ந்த மன்னுயிர்க்
கெனையவா றன்பின னிராம னீண்டவற்
கனையவா றன்பின வவையு மென்றனர்.

84. மொழிந்தது கேட்டலு மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்தபே ருவகையிற் பொங்கு காதலன்
கழிந்ததோ ரிடரினன் களிக்குஞ் சிந்தையன்
வழிந்தகண் ணீரினன் மன்னன் கூறுவான்.

85. செம்மையிற் றருமத்திற் செயலிற் றீங்கின்பால்
வெம்மையி னொழுக்கத்தின் மேன்மை மேவினீர்
என்மக னென்பதென் னெறியி னீங்கிவன்
நும்மகன் கையடை நோக்கு மீங்கென்றான்.

86. அரசவை விடுத்தபி னண்ணல் மன்னவன்
புரைதபு நாளொடு பொழுது நோக்குவான்
உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினான்.

வேறு

87. ஆண்ட வந்நிலை யாக வறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கலர்
இண்ட வோடின ரிட்டிடை யிற்றிலர்.

88. ஆடு கின்றனர் பண்டையி னன்றியே
பாடு கின்றனர் பார்த்தவர்க் கேகரஞ்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலர்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே.

89. கண்ட மாதரைக் காதலி நோக்கினாள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
உண்டு பேருவ கைப்பொரு ளன்னது
தொண்டை வாயினிர் சொல்லுமி னீண்டென்றாள்.

90. மன்னெ டுங்கழல் வந்து வணங்கிடப்
பன்னெ டும்பகல் பாரளிப் பாயென
நின்னெ டும்புதல் வன்றனை நேமியான்
தொன்னெ டும்முடி சூட்டுகின் றானென்றார்.

91. சிறக்குஞ் செல்வ மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கைக்கடல் பெட்பற
வறக்கு மாவட வைக்கன லானதால்
துறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே.

92. அன்ன ளாயு மரும்பெற லாரமும்
நன்னி திக்குவை யுந்நனி நல்கித்தன்
துன்னு காதற் சுமித்திரை யோடும்போய்
மின்னு நேமியன் மேவிட மேவினள்.

93. மேவி மென்மல ராணில மாதெனுந்
தேவி மாரொடுந் தேவர்கள் யாவர்க்கும்
ஆவி யும்மறி வும்முத லாயவன்
மாவு லாமலர்ப் பாதம் வணங்கினள்.

94. என்வ யிற்றரு மைந்தற் கினியருள்
உன்வ யத்ததென் றூளுல கியாவையும்
மன்வ யிற்றி னடக்கிய மாயனைத்
தன்வ யிற்றி னடக்குந் தவத்தினள்.

95. என்றி றைஞ்சியவ் விந்திரை கேள்வனுக்
கொன்று நான்மறை யோதிய பூசனை
நன்றி ழைத்தவ ணல்ல தவர்க்கெலாங்
கன்று டைப்பசு வின்கட னல்கினள்.

96. பொன்னு மாமணி யும்புனை சாந்தமும்
கன்னி மாரொடு காசினி யீட்டமும்
இன்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன முந்தளி ராடையு நல்கினள்.

97. நல்கி நாயக னுண்மலர்ப் பாதத்தைப்
புல்லிப் போற்றி வணங்கிப் புரையிலா
மல்லன் மாளிகைக் கோயில் வலங்கொளாத்
தொல்லை நோன்புகள் யாவும் தொடங்கினள்.

IV

வில்லி புத்தூரார் பாரதம்

சந்தனு வரலாறு

1. அந்தணன் மரபினி லமுத வெண்டிரைச்
சிந்துவின் மிசைவரு திங்க ளாமெனச்
சந்தனு வெனும்பெயர்த் தரணி காவலன்
வந்தன னவன்செயல் மகிழ்ந்து கேண்மினோ.

2. வேனிலா னிவனென விளங்கு காலையிற்
கானக வேட்டைபோ யிளைத்த காவல
னனமென் குளிர்புன லாசை யான்மணித்
தூநிறக் கங்கையாள் சூழ லெய்தினன்.

3. மருவரும் குழல்விழி வதனம் வார்குழை
யிருதனங் தோள்கழுத் திதழொ டின்னகை
புருவம்வண் புறவடி பொற்பப் பாவையர்
உருவுகொண் டனடன துடைமை தோன்றவே.

4. கங்கையின் வெள்ளமேற் கருத்து மாறியிம்
மங்கைதன் பேரொளி வனப்பின் வெள்ளமே
தங்கிய சோகமும் தாப முங்கெடப்
பங்கய விழிகளாற் பருகி னனரோ.

5. வையக மடந்தைகொல் வரைம டந்தைகொல்
செய்யபங் கயமலர்த் திரும டந்தைகொல்
துய்யவண் கலைவிதச் சொன்ம டந்தைகொல்
ஐயமுற் றனனிவ ளார்கொ லென்னவே.

6. கண்ணிமைத் திருநிலங் காலுங் தோய்தலால்
பெண்ணிவண் மானுடப் பிறப்பி னளென
எண்ணமுற் றவளரு கெய்தி யாவர்செய்
புண்ணிய நீயெனப் புகழ்ந்து போற்றினன்.

7. போற்றிய குரிசின்மெய் புளக மெய்தவே
ஏற்றிய விழியின ளிளகு நெஞ்சினள்
சாற்றிய மலரயன் சாப மிவ்வழித்
தோற்றிய தெனவுறு துயர நீங்கினுள்.

8. கன்னியே யாமெனிற் கடிகொள் பான்மையை
என்னின்மற் றுயர்ந்தவ ரில்லை மண்ணின்மேல்
உன்னினை வுரையென வுசாவி னுனிகன்
மின்னிலை வடிகொள்வேல் வேந்தர் வேந்தனே.

9. நாணின ளாமென நதிம டந்தையும்
பூணுறு * * * பொருந்த நோக்கினள்
சேணுறு தனதுமெய்த் தேசு போனகை
வாணில வெழச்சில வாய்மை கூறுவாள்.

10. இரிந்துமெய்ந் நடுங்கிட யாதி யாதுநான்
புரிந்தது பொறுத்தியேற் புணர்வ துன்புயம்
பரிந்தெனை மறுத்தியேற் பரிவொ டன்றுனைப்
பிரிந்தகன் றிடுவனிப் பிறப்பு மாற்றியே.

11. மெய்தரு விதியினேன் விரத மற்றிவை
எய்தரி தொருவரா லெய்த வல்லையேல்
கைதரு கெனப்பெருங் காத லாளனும்
உய்வரி தெனவிசைந் துடன்ப டுத்தினுன்.

12. எனதுயி ரரசுவாழ் வென்ப யாவையும்
நினதுநின் னேவலி னிற்பன் யானென
வனிதையை மருட்டினுன் மன்ற லெண்ணியே
தனதனு நிகரிலாத் தனம கீபனே.

13. அருமறை முறையினு லங்கி சான்றெனத்
திருமணம் புரிந்துளந் திகழ வைகினுன்
இரதியு மதனனு மல்ல தில்லைமற்
றெருவரு முவமையென் றுலகு கூறவே.

14. மருவுறச் சிலபகன் மணந்து மான்விழி
கருவுயிர்த் தனளெனக் களிகொள் காலையில்
பருவமுற் றன்புடன் பயந்த மைந்தனைப்
பொருபுனற் புதைத்தனள் புவனங் காணவே.

15. கண்டுளம் வெருவிமுன் கதித்த வாசகங்
கொண்டுரை யெடுத்திலன் கொண்ட காதலான்
ஒண்டொடி யுடன்மணந் துருகி வைகினன்
பண்டையி னெழுமடி பரிவு கூரவே.

16. பின்னரு மறுவரைப் பெற்ற தாய்மனம்
முன்னரின் மும்மடி முரண்டு மாய்க்கவே
மன்னவ னவற்றினும் வாய்தி றந்திலன்
நன்னகர்ச் சனமெலா நடுந டுங்கவே.

17. வழுவறு குருகுல மன்னன் மைந்தரோர்
எழுவரை முருக்கின ளீன்ற தாயெனப்
பழுதறு மகப்பல பயந்த மங்கையர்
அழுதனர் கட்புன லாறு பாயவே.

18. கங்கையென் றுலகெலாங் கைதொ ழத்தகு
மங்கையங் கனந்தரம் வயிறு வாய்த்துழி
வெங்கய கடகரி வேந்தன் மாமனப்
பங்கயந் துறந்தது பழைய வின்பமே.

19. மதலையைப் பயந்தனண் மடந்தை யென்றலுங்
கதுமெனச் சென்றுதாய் கைப்ப டாவகை
இதமுறப் பரிவுட னெடுத்து மற்றவள்
பதயுகத் தாமரை பணிந்து பேசுவான்.

20. நிறுத்துக மரபினை நிலைபெ றும்படி
வெறுத்தெனை முனியினும் வேண்டு மாலிது
மறுத்தனன் யானென மனஞ்செ யாதினிப்
பொறுத்தருள் புரிகவிப் புதல்வன் றன்னையே

21. என்றுபற் பலமொழி யிவனி யம்பவே
நன்றுநன் றவனிப நவின்ற வாசகம்
இன்றுநின் றிரங்கினை யெழுவர் மைந்தரைக்
கொன்றவன் றென்செய்தாய் கொடியை யென்னவே.

22. அரசனு முணர்ந்துநீ யார்கொல் பாலரைத்
திரைசெறி புனலிடைச் செற்றதென் கொலாம்
உரைசெய வேண்டுமென் றுரைப்ப வஞ்சியும்
வரிசையி னுயர்ந்ததன் வரவு கூறுவாள்.

23. வான்முக மதியமும் புதிய மாலிகைக்
கான்முக விதழியுங் கமழுங் கங்கையாள்
தேன்முகம் பொழிதரு செய்ய தாமரை
நான்முகன் பேரவை நண்ணி னளரோ.

24. இருங்கலை யிமையவ ரெதிரி றைஞ்சுவாண்
மருங்கலை மதியினை மதிக்கு மாறுபோல்
அருங்கலை யயலுற வதிர்ந்து வீசினன்
பொருங்கலை யெனுமிகற் புரவி வீரனே.

வருணன் கங்கையை நோக்கினுன்

25. நோக்கிய வருணனை நுவலு நான்மறை
யாக்கிய முனியுருத் தழன்று பார்மகள்
பாக்கிய மென்னவுற் பவிக்க நீயெனத்
தாக்கிய வுருமெனச் சபித்த காலையே.

26. கோனிட நினைவொடு குறுகி நீயுநன்
மானிட மடந்தையாய் மணந்து மீள்கென
வானிடை நதியையும் வழுவி லுலவள்
தானிட ருறும்வகை தந்தை யேவினன்.

27. பாரினு நமக்கொரு பதமுண் டென்றவள்
இரமுற் றிழிதரு மெல்லை வானகத்
தோரிடை யுடன்விழு முற்கை போன்முக
வாரொளி மழுங்கினர் வசுக்க டோன்றினர்.

28. என்னையிங் கிழிந்தவா றெங்கண் மாநதி
அன்னையென் றவளடி யவர்வ ணங்கலுந்
தன்னையங் கயனிடு சாபங் கூறினள்
பின்னையங் கவருந்தம் பெற்றி பேசுவார்.

29. உற்றுறை யெங்களு ளொருவன் றன்மனைப்
பொற்றொடிக் கழிந்தவள் புன்மை வாய்மையால்
சற்றுமெய் யுணர்வறத் தகாதொன் றெண்ணினன்
மற்றெழு வருமவன் வயத்த ராயினேம்.

30. தூநகை மொழிப்படி சோர ராகியே
வானவர் வணங்குதாள் வசிட்டன் வாழ்மனைத்
தேனுவை யிரவினிற் சென்று கைக்கொளா
மீனெறி கரந்தென மீள வேகினேம்.

31. பசுக்கவர்ந் தனரெனப் பயிலு மாதவ
முசுக்குல மனையமெய்ம் முனிவர் கூறலுஞ்
சிசுக்களி னறிவிலாச் சிந்தை செய்தவர்
வசுக்களென் றருந்ததி மகிழ்ந னெண்ணினன்.

32. உம்பத மிழந்துநீ ருததி மண்ணுளோர்
தம்பதம் பெறுகெனச் சாபங் கூறலும்
எம்பதம் பெறுவதென் றினியெ னுவவன்
செம்பத மெமதுபூஞ் சென்னி யேந்தினேம்.

33. அன்புடை முனிமுனி வாறி மானுடப்
புன்பிறப் பெழுவரும் புரிந்து மீளுதிர்
மின்புரை தெரிவைசொல் விழைந்த நீயவண்
இன்பமற் றநேகநா ளிருத்தி யென்னவே.

34. விண்வரு செல்வமும் விழைவு மேன்மையும்
எண்மரு மிழந்தன மென்செய் வேமென
மண்வரு தையலை வணங்கத் தையலும்
பண்வரு மொழிசில பகர்ந்து தேற்றினள்.

35. வலத்துயர் தடம்புய வருண னுங்குரு
குலத்தினி லயன்வரங் கொண்டு தோன்றுமால்
நலத்துட னவன்மனை நண்ணு மெல்லையில்
நிலத்திடை யென்வயி னீருந் தோன்றுவீர்.

36. அஞ்சன்மி னும்மைநா னவனி தோயுமுன்
எஞ்சவீட் டிடுவனிவ் விறைவன் றன்னையும்
நெஞ்சுறத் தந்தைபா னிறுத்தி நானுமவ்
வஞ்சகப் பிறப்பினை மாற்று வேனென்றாள்.

37. நாலிரு வசுக்களு நதிம டந்தைசொற்
பாலிரு செவிப்படப் படாத நற்றவஞ்
சாலிரு நிலத்திழி தாயை யன்புடன்
காலிரு கரத்தினுற் கசிந்து போற்றினர்.

38. சதையமீன் கடவுளுஞ் சசிகு லத்துநல்
விதையென மேதினி மீது தோன்றினன்
துதையளி செறிகுழற் றோகை யாயினள்
இதையமுற் றுயர்நதி யென்னு மின்னுமே.

39. தவமுறக் குடதிசைத் தலைவன் றாரமாம்
அவள்வயிற் றுதித்தன ரந்த வெண்மரும்
உவகையிற் பெருமநீ யுணர்ந்து கொள்கென
இவடிருக் கணவனு மின்ன கூறுவான்.

40. அறப்பய னென்னுமா றறிவி லாவெமைப்
பிறப்புணர்த் தினைமகப் பேறு செய்துநீ
இறப்பவ ரெழுவரோ டேக லாவுயர்
சிறப்புடை யினையவன் செய்வ தென்னென்றான்.

41. முக்குலத் தரசினு முதன்மை யாலுயர்
இக்குலத் திவனலா தில்லை மாமகார்
அக்குலத் தவமுனி யருளி னாலிவன்
மெய்க்குலத் தந்தையாம் விழைவு மில்லென்றாள்.

42. மன்னவர் தொழுகழன் மன்னன் மைந்தனே
டின்னமு மொருவனை யினித ளித்துநாம்
பன்னக நெடுமுடிப் பார்க ளிக்கவே
பொன்னக ரிருவரும் போது மென்னவே.

43. போயிருந் தென்பயன் போகம் பல்வகை
யாயிருந் தனவெலா மருந்தி யின்னமும்
மாயிருந் தரணியின் மன்னு சில்பகல்
நீயிருந் தரசிய னிறுத்தி மீளுவாய்.

44. இப்புதல் வனுமினி யென்னொ டேகியே
மெய்ப்படு காளையாம் பதத்து மீளநின்
கைப்படுத் துவலெனக் கணவ னைத்தழீஇ
அப்பெரும் புதல்வனோ டவளு மேகினாள்.

வேறு

45. அன்றுதொட் டிவனு மகன்றபூங் கொடியை
யழகுற வெழுதி முன்வைத்து
ஒன்றுபட் டுவமைப் பொருள்களாற் கண்டு
முரைத்தவை யெடுத்தெடுத் துரைத்து
மன்றலிற் றலைநாள் விழைவொடு மணந்த
மடந்தையர் வதனமு நோக்கான்
என்றினிக் கிடைப்ப தென்றுளம் வருந்தி
யெண்ணுநா ளெல்லையாண் டிருந்தான்.

46. பின்னொரு தினத்தி லமைச்சரும் பிறரும்
பெரும்படைத் தலைவருஞ் சூழ
முன்னொரு தினத்தின் வனத்துமா வேட்டை
முன்னினன் முயன்று போய்முற்றி
மின்னொரு வடிவு கொண்டெனச் சிறந்த
மெல்லியன் மீண்டுறை மறையுந்
தன்னொரு மதலை யாக்கமுங் கருதிச்
சானவித் தடங்கரை யடைந்தான்.

47. பண்டுதா னவனை யெதிர்ப்படுங் கனகப்
பைங்கொடிப் பந்தர் வானிழலும்
வண்டரு நறைப்பூஞ் சோலையுந் தடமு
மருங்கலை மலயமா ருதமும்
புண்டரீ கமுஞ்செங் காவியுங் கமழும்
புளினமும் புளினமென் றுறையுங்
கண்டுகா ரிகையை யிம்மையி லின்னுங்
காண்குமோ வெனமனங் கசிந்தான்.

48. பிரிந்தநா ளெண்ணிப் பகீரதிப் பெருக்கைப்
பேதுறுங் குறிப்பொடு நோக்கிக்
கரிந்தபா தவம்போ னின்றவப் பொழுதிற்
கால்பொரக் குனித்தகார் முகமுங்
தெரிந்துமேன் மேலுந் தொடுத்தசா யகமுஞ்
சிலம்பெனத் திரண்டதோ ளிணையும்
விரிந்தநூன் மார்பு மாகிமுன் னடந்தான்
விழிகளித் திடவொரு வீரன்.

49. வியந்திட வருமக் குரிசிலை யிவனே
விடையவன் குமரனென் றயிர்க்கும்
வயந்தனி னுலவு மதன்கொலோ வென்னும்
வாசவன் மதலையென் றெண்ணும்
உயர்ந்தவ ரிவனின் வின்மையி னில்லை
யொருவரு முலகின்மே லென்னும்
பயந்ததன் வடிவின் படியெனத் திகழும்
பான்மையை நினைந்திலன் பயந்தோன்.

50. தந்தையென் றிவனை யுணர்கிலா மதியாற்
சராசனந் தழுவுற வளைத்து
மைந்தனு மொருபோர் மோகனக் கணையான்
மறையுடன் மார்புற வெழுதி

இந்திர தனுவோ டிந்திர னெழிலி
யிடைமறைந் தனனெனப் புடையே
சிந்திய திவலைச் சிந்துவின் மறைந்தா
னரசனு மகிதலஞ் சேர்ந்தான்.

51. காதல னயர்வுந் திருமகன் புனலிற்
கரந்ததுங் கண்டுள முருகி
மேதகு வடிவு கொண்டுமற் றந்த
வெஞ்சிலை விஞ்சைதனுந் தானும்
ஓதவெண் டிரையின் மதியுட னுதித்த
வொண்மலர்க் கொடியென வோடித்
தூதுளங் கனிவாய் மலர்ந்தினி தழைத்துச்
சூடகச் செங்கையா லெடுத்தாள்.

52. வாடிய தருவின் மழைபொழி வதுபோன்
மடவரல் கருணைநீர் பொழியக்
கூடிய வுணர்வோ டெழுந்தகா வலனைக்
கொங்கைமார் புறத்தழீஇக் கொண்டு
நாடிய கருமம் வாய்த்ததென் றுவகை
நலம்பெறத் தந்தைபைங் கழற்கால்
சூடிய மகவைக் கைக்கொடுத் திவளுந்
தோன்றலோ டிவையிவை சொன்னாள்.

53. வேந்தகே ளிவனுன் மதலையே தேவ
விரதனென் றிவன்பெயர் பல்லோர்
ஆய்ந்தநூல் வெள்ளங் கடந்தனன் கரைகண்
டருந்ததி பதிதிரு வருளால்
பூந்துழாய் மாலைப் போர்மழுப் படையோன்
பொன்னடி பொலிவுற வணங்கி
ஏந்துநீள் சிலையும் பலகலை மறையு
மேனைய படைகளும் பயின்றான்.

54. மகப்பெறு மவரி லொருவரும் பெறாத
மகிழ்ச்சியும் வாழ்வுமெய் வலியும்
மிகப்பெறுந் தவநீ புரிந்தனை நின்னை
வேறினி வெல்லவல் லவரார்
உகப்புற விவனோ டவனியா ளுகவென்
றோரடிக் கோரடி புரிந்து
தகப்பெறு மயிலுந் தலைவன்மே லுள்ளந்
தகைவுறத் தடம்புனல் புகுந்தாள்.

55. மனைவியைக் கண்டு மீளவும் பிரிந்த
வருத்தமெய்த் திருத்தகு கேள்வித்
தனையனைக் கண்ட மகிழ்ச்சியா லருக்கன்
றன்னெறி யிருளெனத் தணப்ப
நினைவினிற் சிறந்த தேர்மிசைப் புதனு
நிறைகலை மதியுமே நிகர்ப்பப்
புனைமணிக் கழலா னவனொடுந் தனது
புரமெதிர் கைதொழப் புகுந்தான்.

V

அழகரந்தாதி

1. நீராழி வண்ணனைப் பாலாழி
நாதனை நின்மலனைச்
சீராழி யங்கைத் திருமகள்
கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
கூராழி மாயனை மாலலங்
காரனைக் கொற்றவெய்யோ
னேராழித் தேர்மறைத் தானையெஞ்
ஞான்று முரைநெஞ்சமே.

2. உரைமாற்ற முண்டென் பொறியைந்து
முன்னிடத் தன்றியுண்ணு
மிரைமாற்ற வேண்டு மிதுவேயென்
விண்ணப்ப மென்னப்பனே
யுரைமாற் றளவற்ற பொன்னுடுத்
தாய்வில் லெடுத்திலங்கை
வரைமாற் றலரைச்செற் றுயழ
காகரு மாணிக்கமே.

3. மாணிக் கநகம் புரைமேனி
மாலுக்கு வார்சடையோன்
பாணிக் கனகம் பலியொழித்
தானுக்குப் பச்சைத்துழா
யாணிக் கனக முடியலங்
காரனுக் கண்டமெல்லாம்
பேணிக் கனகனுக் குப்பித்த
ரானவர் பித்தரன்றே.

4. பித்தரும் பாநின்ற நெஞ்சனே வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனைக் கடைக்கணியாய்
முத்தரும் பாருந் தொழுமழ காவண்டு மூசுந்துழாய்ப்
புத்தரும் பார்முடி யாயடி யாரைப் புரப்பவனே.

5. புரந்தர ஞமெனப் பூபதியாகிப் புகர்முகமாத்
துரந்தர சாளிலென் னல்குர வாகிலென் றெல்புவிக்கு
வரந்தர மாலிருஞ் சோலைநின் றூர்க்கென் மனத்தினுள்ளே
நிரந்தர மாயலங் காரர்க்கிங் காட்பட்டு நின்றபின்னே.

6. நின்றபி ராணன் கழலுமுன் னேநெஞ்ச மேநினையாய்
சென்றபி ராயம்வம் பேசென்ற தாற்றிரு மங்கைகொங்கை
துன்றபி ராமனைச் சுந்தரத் தோளனைத் தோளின்மல்லைக்
கொன்றபி ரானை யடைந்தடி யாரொடுங் கூடுகைக்கே.

7. கூடுகைக் குஞ்சர மத்தடி யேற்குக் கொடியவஞ்சச்
சாடுகைக் குஞ்சர ணந்தர வேண்டுந் தடத்தழுந்தி
வாடுகைக் குஞ்சரங் காத்தீர்விண் வாழ்க்கைக்கும் வாளரக்கர்
வீடுகைக் குஞ்சரங் கோத்தீர் விடைவெற்பின் வித்தகரே.

8. வித்தக ரும்பர்க் கரசா னவனும் விதியுங் கங்கை
மத்தக ரும்பர வும்மலங் காரர் மழைகொண்டகா
ரொத்த கரும்பரஞ் சோதியார் நாம முரைத்தன்னைமீ
ரித்தக ரும்பர தெய்வமுங் கூத்தும்விட் டேத்துமினே.

9. ஏத்துமின் பத்தியி னுலெட் டெழுத்து மிணையடிக்கே
சாத்துமின் பத்திரத் தண்ணந்து ழாய்மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்தி செயும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி லிருத்தியும் வைப்பர் கருணைசெய்தே.

10. செய்தவ ராக வருந்தியுந் தீர்த்தத் துறைபடிந்துங்
கைதவ ராகமங் கற்றுமென் னுங்கடற் பார்மருப்பிற்
பெய்த வராகனை மாலலங் காரனைப் பேரிலங்கை
யெய்தவ ராகவ வென்றேத்த நீங்கு மிருவினையே.

11. வினைக்கு மருந்தரிக் கும்பிணி மூப்புக்கும் வீகின்றவே
தனைக்கு மருந்தன்ன தாளழ காசெய்ய தாமரையங்
கனைக்கு மருந்தமு தேயரு ளாய்நின்னைக் காதலித்து
நினைக்கு மருந்ததி தன்னுயிர் வாழ்க்கை நிலைபெறவே.

12. நிலையாமை யான வுடலு முயிரு நினைவுந்தம்மிற்
கலையாமை யானங் கலக்குமுன் னேகங்கை வைத்தசடைத்
தலையாமை யானனன் றாமரை யான்றொழுந் தாளழக
னலையாமை யானவன் மாலிருஞ் சோலை யடைநெஞ்சமே.

13. நெஞ்ச முருக்கு முயிருருக் குந்தொல்லை நீள்வினையின்
வஞ்ச முருக்கும் பவமுருக் கும்வண் டுழாயழகர்
கஞ்ச முருக்கு மலர்வாய்த் திருநண்பர் கஞ்சனுக்கு
நஞ்ச முருக்கு வளையாழி யன்னவர் நாமங்களே.

14. நாமங்க ளாவி நழுவுந் தனையு நவின்றவரைத்
தாமங்க ளாவி மனத்துள்வைப் பார்தண் டலையினகிற்
றாமங்க ளாவி மணநாறு மாலிருஞ் சோலையன்பர்
சேமங்க ளாவின் கனியனை யார்பதஞ் சேருவரே.

15. சேரா தகாத நரகேழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராத காத வசைபிணி பாவ மறிகடன்முன்
றாராத காதங்க டீர்த்தானை மாலிருஞ் சோலையிற்போ
யாராத காத லுடன்பணி வீரென் னழகனையே.

16. அழக்கன் றியகருங் கண்ணிக்குக் கண்ணி யளித்திலரேல்
வழக்கன்றி முன்கொண்ட வால்வளை கேளு மறுத்ததண்டேற்
குழக்கன்றின் பின்குழ லூதலங் காரர்க்குக் கோதைநல்லீர்
சழக்கன்றில் வாய்பிளந் தானுய்ய லாமென்று சாற்றுமினே.

17. சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னு மாசைத் தமிழ்மலையக்
காற்றுக் கரும்பனை யுங்கண்ப டாளலங் காரற்கண்ட
ரேற்றுக் கரும்பனைய கொங்கை யாள்கொண்ட வின்னலுக்கு
மாற்றுக் கரும்பனை யல்லாது வேறு மருந்திலையே.

18. மருந்துவந் தார்தொழு மாலிருஞ் சோலை மலையழக
ரருந்துவந் தாரணி யென்றயின் றூரட லாயிரம்வாய்
பொருந்துவந் தார்பணிப் பாயார் விதுரன் புதுமனையில்
விருந்துவந் தாரடி யார்க்கில்லை நோயும் வெறுமையுமே.

19. வெறுத்த வரைக்கஞ் சனைச்செற்று ளார்விடை வெற்பர்வெங்கண்
கறுத்த வரைக்கஞ்ச லென்றுவந் தார்கன காம்பரத்தைப்
பொறுத்த வரைக்கஞ் சனமேனிக் காவி புலர்ந்துருகிச்
சிறுத்த வரைக்கஞ்சங் கூப்புமென் பேதைக்கென் செப்புவதே.

20. இருக்கந் தரத்தனை வோர்களு மோதி யிடபகிரி
நெருக்கந் தரத்தனை யேத்தநின் றூனை நிறத்ததுப்பி
னுருக்கந் தரத்தனைத் துன்பொழித் தானை யுலகமுண்ட
திருக்கந் தரத்தனை யல்லாதெண் ணேனொரு தெய்வத்தையே.

VI

நீதி நெறி விளக்கம்

1. நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

2. கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் — சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு.

3. தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த லீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற் — றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பு
நயவாமை யன்றே நலம்.

4. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு — பிறர்பிறர்
சீரெலாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தி
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

5. வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் — மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு.

6. கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந் — தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

7. குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொள லு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

8. ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை மூதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

9. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா — ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

10. புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும் — விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோ டுதற்கு.

11. செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா—கவிழ்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே யமைச்சு.

12. முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்திறத்த வென்னர் — மயலாயும்
ஊற்ற மிறுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்றா ரெறிகான் முகத்து.

13. உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே — உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

14. கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து — மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை யாளப் படும்.

15. இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே — அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கு மெய்
சிங்கி குளிர்ந்துங் கொலும். [பொடிப்பச்

16. குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவுந் — தவம்விற்றூங்
கூனோம்பும் வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉந்
தானோம்பிக் காத்த றலை.

17. தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளூன்றி — எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃ
புறங்கடைய தாகும் பொருள். [கார்

18. இகை யரிதெனினு மின்சொலினும் நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா — நாகொன்று
தீவினைக் கம்மியனல் வாய்ப்பூட் டிடப்படின்மற்
றூவா விவரென்செய் வார்.

19. சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல — வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

20. சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார் — அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

VII

நால்வர் நான்மணி மாலை

1. பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு - நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றல்லை
வெறித்தண் கமலமே வீடு.

2. வீட்டிற்கு வாயி லெனுந்தொடை
சாத்துசொல் வேந்தபொது
வாட்டிற்கு வல்ல னொருவற்கு
ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய்
நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப்
பீரெப் படியினுமே.

3. படியிலா நின்பாட்டி லாரூர
னனிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச
னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பா
னினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்கு மாறே.

4. விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ

யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழுநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

5. எனக்கன்பு நின்பொருட் டெய்தாத
தென்கொல்வெள் ளேறுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக
வேந்தவித் தாரணியி
னினக்கன்பு செய்கின்ற வப்பூதி
யைச்சிவ நேசமுறும்
இனர்க்கன்பு செய்நம்பி யாரூர
னேத்து மியல்பறிந்தே.

6. அறிந்து செல்வ முடையானு மள்கைப்
பதியாற் றேழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன்
வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா
நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த் திகழு
நுதற்கட் பெருமானே.

7. பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசு........ வேய்த் தோளிடத் தவனே.

8. கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ்
சின்னமுங் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு நாவரசாய
பெருந்தகையோய்
கள்ளைக் குவளை யுமிழ்வீ
ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர்
கையிலென் வாங்கினையே.

9. வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனுல்
ஓங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள....பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே.

10. கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிமா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றும்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்

பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
.... மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக்கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
.... வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே.

11. மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு.

12. தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னூறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னுணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலியாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே.

13. நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா
னூற்பக வன்னநுண் மருங்குல்
.... மென் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றன னென்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு முதலை விழுங்கிய மதலை
கான்றிடத் தோன்றுநா வலனே.

14. வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே.

15. பயனுகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா — முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு.

16. பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே.

17. போத முண்ட பிள்ளை யென்பு
பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ
னக்கி யம்ப வேண்டுமே.

18. வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ

முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே.

VIII

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

1. காப்புப் பருவம்

கார்கொண்ட கருநிறக் காளத்தை வெண்திரைக்
    கைகளின் எடுத்து நீட்டும்
கடும்பிழையை நோக்காது திருவினொடு சுவையமுது
    கதிர்மணி தனக்கு தவிடும்
பேர்கொண்ட நன்றியே பாராட்டி வெண்கேழ்ப்
    பெருங்கடற் பள்ளி கொண்டு
பிறங்குநீர்ப் புவிமிசைப் புருடோத்த மப்பெரும்
    பெயர் நிறுவும் அண்ணல் காக்க
ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும் ஊருநரும்
    இலரென்ப துலகு தேறற்
கெடுத்தவெம் பாசமோ டங்குசம் தன்கரத்
    தேந்திமத தாரை சிதறிப்
பார்கொண்ட எண்திசைத் தறுகட் களிற்றுடல்
    பனிப்பச் செவிக்கால் எழீஇப்
பகிரண்ட மூற்றும் புகுந்துலாய்க் கலைசையிற்
    பதியுமோர் களிறு தனையே.

2. செங்கீரைப் பருவம்

பொங்கொளி வீசுபொ லங்குழை
    காது புகுந்தேர் கொண்டாடப்
பொன்திகழ் தோளணி தொங்கலி
    ளோடு புலம்பா நின்றாடத்
துங்கநி லாவுத டங்கையி
    னீர்சுல வுங்கார் வென்றாடத்
துன்றிய தேமலி குஞ்சியி
    ளேடுதொ குந்தார் விண்டாடப்

பங்கயன் ஆதியர் வந்துத
வாதப தந்தா என்றூடப்
பண்பறு நேரலர் நெஞ்சழல்
வாயுறு பஞ்சாய் நைந்தாடச்
செங்கழு நீர்மத தந்திவி
நாயக செங்கோ செங்கீரை
தென்கலை சாபுரி தங்கிய
நாயக செங்கோ செங்கீரை.

3. தாலப் பருவம்

புதிய வாசம் தனைப்பரப்பிப்
புறத்தே எங்கும் திரிந்தயரும்
பொறிவண் டினங்கள் தமையழைத்தம்
புயத்தேன் ஊட்டிப் பகலோம்பி
முதிய நிசிவந் திடும்போது
முகைவிண் டலர்ந்த நறுங்குமுத
மூரிச் செழுந்தேன் முகந்தூட்டி
முழுதுங் காத்துக் கடல்வரைப்பின்
வதியும் இரவோர் தமைக்கீர்த்தி
மகளாந் தூதின் வரக்கூவி
மகிழ்ந்தெப் போதும் எவ்வாறும்
வழங்கிக் காக்கும் பெருங்கொடையோர்
கதிய தடம்சூழ் திருக்கலைசைக்
களிறே தாலோ தாலேலோ
கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்
கன்றே தாலோ தாலேலோ.

4. சப்பாணிப் பருவம்

மும்மல மாமதம் உற்றுப்
போத முழுத்தறி அறவீசி
முகிழ்த்தலர் அன்பின் சங்கிலி
உதறி மூதிர்ந்தவர் உட்கூடத்

திம்மென நீங்கி வெளிக்கொடு
புவனமெ னுங்கடு வனமோடி
எப்பா கர்க்கும் அடங்கல
வாகி இயங்கும் உயிர்க்கரிகள்
தம்மை விடாது தொடர்ந்து
பிணிப்பத் தகுமங் குசபாசம்
தாங்குதல் கண்டும் தம்போல்
எண்ணிச் சார்பவை தமைநகையாக்
கொம்மை மலர்க்கைகள் கொட்டுவ
தேய்ப்பக் கொட்டுக சப்பாணி
குலைகெழு தடநிறை கலைசைந
கர்க்கிறை கொட்டுக சப்பாணி.

5. முத்தப் பருவம்

திரைபூத் தொடுங்குவ தெனப்படி அளிக்குலம்
சிறைபுடை பெயர்த் தொடுக்கித்
தீஞ்சுவை மடுத்துண்டு களிதரப் பூங்கவுள்
திறந்தூற் றிருந்து வட்டும்
விரைபூத்த கடமும் கொலைத்தொழில் பழுத்தொழுகும்
வெய்யகூர்ங் கோடு மெங்கள்
மென்மலர் முகத்திற் பெருங்கறையும் ஊறும்
விளைத்திடின் விளக்க வெங்கள்
மரைபூத்த கண்ணிமைக் குள்ளெழுது மையும்
வயங்குழூக் கணியும் ஐயன்
வதனத் திருங்கறையும் ஊறும் செயாஅன்பு
வாய்ப்பப் பவக்க டற்கோர்
கரைபூத்த செம்மொழிப் பழமறை முளைத்தநின்
கனிவாயின் முத்தம் அருளே
கலைசைநகர் வந்தசெங் கழுநீர் மதக்களிறு
கனிவாயின் முத்தம் அருளே.

6. வருகைப் பருவம்

உருகும் அடியார் அள்ளூற
உள்ளே ஊறுந் தேன்வருக
உண்ணத் தெவிட்டாச் சிவாநந்த
வொளியே வருக புலன்வழிபோய்த்
திருகும் உளத்தார் நினைவினுக்குச்
சேயாய் வருக எமையாண்ட
செல்வா வருக உமையீன்ற
சிறுவா வருக இணைவிழியால்
பருகும் அமுதே வருகஉயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருகநறும்
பாகே வருக வரைகிழித்த
முருக வேட்கு முன்னுதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே.

7. அம்புலிப் பருவம்

ஒளிவந்த நீயுடற் கூறுபடு வெம்பாந்தள்
ஒன்றனுக் கஞ்சி யஞ்சி
உழிதந்து திரிவையிவன் அண்டபகி ரண்டமும்
ஒருங்கஞ்ச வெய்து யிர்க்கும்
துளிவந்த காரிபடு துளைவெள் ளெயிற்றுவாய்த்
துத்திப் படக்கோளராத்
தொகையெலா மெய்யினுங் கையினுங் கலனெனச்
சூழ்ந்துகொண் டான்வெண் மைகூர்ந்
திளிவந்து தேயுங் களங்கவுரு உடையைநீ
இவன்செம்மை வாய்ந்து தேயா
தென்றுமக ளங்கவுரு உடையனு கலினிவனை
எவ்வாறும் ஒப்பாயலை

அளிவந்து நின்னையும் அழைத்தனன் காண்
தம்புலீ யாட வாவே [விரைந்
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறே
டம்புலீ யாடவாவே.

8. சிற்றிற் பருவம்

விருந்து விளிப்போ மெனக்கருதும்
வேலை அடிகேள் இவணீயே
விரும்பி வந்தா யெனமகிழ்ச்சி
மீக்கூர் தலினுற் செவ்வாயின்
முருந்து தோன்ற முறுவலித்தேம்
அல்லால் ஒருநின் கரிமுகம்போல்
முகமும் பூதப் பெருவயிறும்
முடங்கும் குறட்டாள் நகுநடையும்
இருந்தவாறு நோக்கி நகைத்
திட்டேம் அல்லேம் இடந்தோறும்
இருக்கு முழக்கும் தேவாரத்
திசையும் துவன்றி ஓங்கவளம்
திருந்தும் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறும்
செல்வா சிற்றில் சிதையேலே.

9. சிறுபறைப் பருவம்

மலைவற முப்பொருள் இயல்பு
தெளித்தருள் ஒருமுதலே
மலையென முற்படு வினைகள்
அறச்செயும் எமதுயிரே
அலையு மனத்தையும் நிலையின்
நிறுத்திடும் அருளுருவே
அமிழ்தின் இனித்துடல் இடனும்
முகிழ்த்தொளிர் சிவவிளைவே.

உலைவறு கற்பகம் எனவருள்
கொட்டிய மழகளிறே
உலகம் அனைத்துநின் னுடலி
லடக்கிய நிறைபொருளே
கலைசையின் உற்பல இறைவ
முழக்குக சிறுபறையே
கடலொலி பிற்பட இனிது
முழக்குக சிறுபறையே.

10. சிறுதேர்ப் பருவம்

வண்டின முழக்கமுகை விண்டலர் பசுந்துழாய்
மாலையம் படலை மார்பின்
மாயோன் கிடக்கையை உடுக்கையென் றுண்டமட
மங்கைக்கு மகுடம் ஆன
தொண்டைமண் டலம்வாழ மகுடம் பதித்தபொற்
சுடர்மணி நிகர்த்த தொல்சீர்த்
தொட்டிக் கலைபதி தழைக்கஅப் பதிமருவு
தூயசிவ பத்தர் வாழக்
கண்டிகையும் வெண்ணீறும் அஞ்செழுத் தும்பொலிவு
காட்டவை திகமார்க்கமும்
கரிசற்ற சைவமும் வளர்ந்தோங்க வாங்கும்
கடற்புவி மகிழ்ச்சி தூங்கத்
திண்டிமம் தாக்கும் குறட்கணம் சூழநீ
சிறுதேர் உருட்டி அருளே
சிற்பரன் தென்கலைசை உற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி அருளே,

IX

ஸ்ரீமத் குமாரசுவாமியம்

திருக் கைலாயத் திருவிளையாடல்

1. அளவி லாவறி வன்சர வணத்தட மமல
நளின மீதறு குழவிக ளாய்மிளிர் ஞான்று
அளக நீள்சிவை யறுமுக னுயவிர் கென்றே
வளர்க ரங்களி னணைத்தது கண்டுள மகிழ்ந்தாள்.

2. அருத்தி னுடிரு வமுதமு முண்டத ராப்பூண்
ஒருத்த னேடவ ளோடும டைந்ததொண் கயிலை
திருத்த மார்நவ வீரர்க ளிலக்கர்கள் சிதறு
அருத்தி யோடுற வாடலுங் கொண்டதம் மழவே.

3. காலி னேழ்கட லுடைத்தது விடுத்தது கடின
மாலி ரூவெழு வான்வரை தகர்த்தது வைசால்
வேலி னுலிருந் திசைக்கரி யாவையும் வீரிட்
டோவி டுஞ்சிறு பந்தென வாடிய துவப்பால்

4. இன்ன வாறுபல் பெருந்திரு வாடல்க ளிழைத்த
இன்ன லேதுமில் பரம்பொரு ளென்விளை யாட்டாற்
பின்ன மாயவெல் லாமுனம் போற்பிறங் குகவென்
றுன்னி யன்னண மாக்கிய மாண்பெவ ருறுவார்

5. பின்றை மாகயி லாயம தடைந்தெழில் பிறங்கு
மன்றன் மெய்யிளம் பூரணன் வதிதரு காலை
கொன்றை சூடியை நினைந்தொரு நாரதன் குயிலு
கின்ற வேள்வியிற் றகர்பிறந் ததுமுறை கெடலால்.

6. தண்டை நூபுரங் கால்களிற் றயங்குமத் தகர்தான்
கொண்ட சேவுடல் குலுக்கி யெப்புவனமுங் குலுங்க
மண்டி யேவரு கிறததை யடக்கென மாண்பார்
அண்டர் மாதவர் தொழுதனர் சேயவ னடியை.

7. வீர பாகுதன் கைகளி னுலதன் மிடன்மெய்ச்
சீர ரூவணம் பிடித்ததைக் கொணர்தலுஞ் சேய்மைத்
தாரமேனிய னதன்மிசை யிவர்ந்துபஃ றலமும்
ஏர ருமனு லாவியென் னூர்தியிஃ தென்றான்.

8. அக்க டாவுமவ் வாறமர் வடைந்தபின் னளியாற்
சொக்க ரூவய னரனடி களின்மலர் தூவி
மிக்க வோகையொ டேவெளி வருகையின் மிடலார்
செக்கர் வேளடி போற்றலி லாதய றிரிந்தான்.

9. அவ்வயன்றனை யழைத்துமுற் குடிலையி னருத்தஞ்
செவ்வ னோதுதி யெனக்குகன் கூறலுஞ் சிருட்டி
எவ்வ மின்றுசெய் நானது வென்றய னியம்ப
உவ்வி புண்ணுறப் புடைத்தன னவனையவ் வொருவன்.

10. குட்டி மேலுதைத் திருந்தளை யிட்டிவற் கொடுபோய்
விட்டி டாதுகந் தாசல மிருத்துமி னெனுஞ்சூள்
இட்ட வாறுசெய் தனர்கண ரீசனுக் கவ்வோம்
கட்ட தோதின னருணையன் புகழ்தனிக் கடவுள்.

குறிப்புரை

I

புறநானூறு

புறநானூறு என்பது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகும். அத்தொகை நூல்கள் சங்கச் சான்றோர்களால் பாடப்பட்டவை. எட்டுத் தொகை நூல்களாவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித் தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

இந்நூல் புறப்பொருளைப்பற்றிக் கூறும் நானூறு அகவற் பாக்களை யுடையது. அவைகளுள் முதற் செய்யுள் கடவுள் வாழ்த்தாகும். அது பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பெற்றது. எஞ்சிய பாக்கள் முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர் கிழார் இறுதியாகவுள்ள பல புலவர்களால் இயற்றப்பெற்றவை. இப் பாக்களை நூலாகத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னார் இன்னார் என்று இப்பொழுது விளங்கவில்லை. இந்நூலிலுள்ள பாக்களினது அடிகளின் சிறுமையும் பெருமையும் தெரியவில்லை. இதைப் புறப்பாட்டெனவும், புறம் எனவும், புறம்பு நானூறு எனவும் பெயர்கூறி வழங்குவர். புறப்பொருளைப்பற்றி இந்நூல் கூறுவதால் இதை இப்பெயர்களால் வழங்கலாயினர்.

பொருள் என்பது அகம், புறம் என இருவகைப்படும்.

அகமாவது ஒத்த அன்பினராகிய தலைவன் தலைவி என்ற இருவர் உள்ளத்தின்கண் நிகழும் இன்பமாகும். அது அவர்கள் உள்ளத்திற்கே புலனாகி இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்ச்சியாலேயே நுகரப்படுவதாம்.

புறமாவது முற்கூறிய ஒத்த அன்புடையாராலேயே யன்றி எல்லாராலும் அநுபவித்து இஃது இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவதாம்.

அறனும் பொருளும்பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறம் என்றது ஆகுபெயர். அகம் என்பதும் ஆகுபெயராகும். அகம் - உள் ; புறம் - வெளி.

இந்நூலால் முற்காலத்தில் இத்தமிழ் நாட்டிலிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர், சிற்றரசர், அமைச்சர், படைத்தலைவர், வீரர், முதலிய பலருடைய வரலாறு களும், அக்காலத்தவருடைய கல்வி அறிவு, ஒழுக்கம், கொடை, போர்முறை, அரசியல் முறை, நீதிமுறை முதலியனவும் நன்கு விளங்கும்.

இந்நூலின் 267, 268 ம் பாடல்கள் இதுகாறும் கிடைத்தில.

இந்நூற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அதுவும் முதல் 266 பாடல்களுக்குமட்டுமே கிடைத்துளது.

இந்நூலை மிக உழைப்புடன்தேடி எடுத்து ஒழுங்குபடுத்தி அச்சிட்டு உதவியவர்கள் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஆவார்கள்.

இதனுடைய முதற்பதிப்பு 1894 ம் ஆண்டிலும், இரண்டாம் பதிப்பு 1923 ம் ஆண்டிலும், 3 ம் பதிப்பு 1935 ம் ஆண்டிலும் வெளியாயின.

1. இச்செய்யுளை இயற்றியவர் நரிவெரூஉத்தலையார் ஆவார். இவர் யாது காரணத்தாலோ தம்முடம்பு வேறுபட்டிருந்து சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்டநாளில் அவ்வேறுபாடு நீங்கித் தம்முடம்பு பெற்றனர் என்பர். இவரால் பாடப்பெற்ற பாக்கள் குறுந்தொகையிலும் திருவள்ளுவமாலையிலும் உண்டு.

திணை - பொதுவியல். வெட்சித்திணை முதலிய புறத்திணைகட்கெல்லாம் பொதுவாயுள்ளனவும் அவற்றில் கூறுது ஒழிந்தனவுமாகிய செய்திகளைக் கூறுவதாம்.

துறை - பொருண்மொழிக் காஞ்சி - முனிவர் தெளிந்த பொருளை ஏனையோர்க்கு எடுத்துக் கூறுவதாம்.

பல்சான்றீர் - பல அமைந்த குணங்களையுடையீர். கயல்முள் - மீன்முள். இது மிக்க வெண்மையுடையது, ஆதலால் நரைக்கு உவமை. திரை கவுள் - தோல் சுருங்கிய கன்னம். கணிச்சி - மழு. கூர்ம்படை - கூர்மையாகிய படைக்கலம். கடுந் திறலொருவன் - கடிய வலியையுடைய யமன். பிணிக்குங் காலை - (பாசத்

தால்) கட்டும் பொழுது. ஓம்புமின் - பரிகரியுங்கள், நீக்குங்கள். படூஉம் - செலுத்துகின்ற. பலராகிய சான்றீரென்பது பல்சான்றீ ரெனத் தொக்கது. பயனில் மூப்பு என்று கூறிவைத்துப் பல்சான் றீரே என்றது இகழ்ச்சிக் குறிப்பு. பல்சான்றீரே என்ற அடுக்கு விரைவின்கண் வந்தது. நல்லது, அல்லது என்பன குறிப்பு வினை யாலணையும் பெயர்கள். மாது, ஓ இரண்டும் அசைகள். நெறியு மார் - என்பதில், மார்அல்லது ஆர் அசை.

2. இச் செய்யுளை இயற்றியவர் பிசிராந்தையார் ஆவார். இவர் பாண்டி நாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரினர். உறை யூரில் ஆட்சி புரிந்துவந்த கோப்பெருஞ் சோழனுடைய உயிர்த் தோழர். அவன் அரசைத் துறந்து உயிர் நீத்தற்காக வடக் கிருந்தபோது அவனால் குறிக்கப்பட்ட காலத்திலேயே வந்து அவனைக் கண்டார். கண்டு அவனோடு உயிர் நீத்தார். உணர்ச்சி ஒத்த நட்பிற்கு எடுத்துக் காட்டானவர். நரை திரை மூப்புத் துன் பங்களின்றி நெடிது வாழ்ந்தவர். இவரை இரும்பிசிராந்தையா ரென்றும் கூறுவர். பாண்டியன் அறிவுடை நம்பி என்பவர் இப்பிசி ராந்தையார் காலத்தவர்.

திணை - பாடாண்டிணை - ஒருவனது கீர்த்தியும் வலியும் கொடையும் அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்து சொல்லுதலாம்.

துறை - செவியறிவுறூஉ - மாற்சரியமும் கெடுதலுமில்லாத பெரிய எண்ணத்தை அரசனுக்குச் சொல்லுதலாம்.

இச்செய்யுளுக்குத்திணை பொதுவியலென்றும், துறை பொருண்மொழிக் காஞ்சி என்றும் கொள்ளுதலுமுண்டு.

மா நிறைவு இல்லதும் - ஒரு மாவிற்குக் குறைந்த நிலத்தி லுள்ள கதிரும். மா - நூறு குழி யளவுள்ள நிலமென்பர். செறு - செய், வயல்; இது அருவா நாட்டுச் சொல். யாத்து - ஈட்டிக் கொடுத்து. பெரிதுநந்தும் - மிகவும் தழைக்கும். கிழவன் மெல்லி யனாகி - அரசன் அறிவால் மென்மையுடையவனாகி. வரிசை - தரம், தகுதி. கல்லென் சுற்றம் - (அரசனுக்கு உறுதி கூறாது அவன் விரும்பியதையே தானும் கூறும்) ஆரவாரத்தினையுடைய சுற்றம். சுற்றம் - சூழ்ந்திருப்போர். பரிவுதப - அன்புகெட. இனி பரிவுதவ என்று பாடங்கொண்டு அக்குடிகட்கு வருத்தம் மிக என்று கூறுதலுமுண்டு. மெல்லியன் கிழவனாகி என்றும் பாடம்.

3. இப் பாட்டை இயற்றியவர் காவற்பெண்டு. இவர் சோழன் கோப்பெருநற்கிள்ளியின் செவிலித் தாயென்று தெரிகிறது. காவற்பெண்டு செவிலித்தாய். இவர் பெயர் காதற்பெண்டு எனவும் காணப்படுகிறதாகவுங் கூறுவர். இவர் செய்யுளிலிருந்து இவர் வீரக்குடியிற் பிறந்த மகள் என்பது புலனாகும்.

திணை - வாகை - வாகைப்பூவைத்தலையிலே சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தலாம்.

துறை - ஏருண் முல்லை - எதிரில்லாதபடி ஆண்மைத் தன்மை மேன்மேல் ஏறு நின்ற குடி ஒழுக்கத்தினை உயர்த்திக் கூறுதலாம். சிற்றில் - சிறுமைஇல். கல் - மலை. அளை - குகை. போர்க்களத்தான் - யுத்தகளத்தில். ஈன்றவயிறோ இது, என்றதன் கருத்து புலிசேர்ந்து போகிய குகைபோல அவனுக்கு என்னிடத்திலுள்ள உறவும் அத்தன்மைத்து என்பதாம். யாண்டு - இடைச்சொல். ஒரும், மாதோ, ஏ - அசைகள். இச் செய்யுள் செவிலித்தாய் தன்னை நற்றாயாகப் பாவித்துப் பாடியதாகும்.

4. இச்செய்யுளை இயற்றியவர் பெருந்தலைச் சாத்தனார் ஆவார். சாத்தனார் என்பது தெய்வத்தான் வந்த இவரது இயற்பெயர். குமணனது தலையை இவர் பாதுகாத்தது பற்றியோ, உறுப்புப் பற்றியோ, இவர் பெயர்முன், பெருந்தலை என்னும் அடைமொழி சேர்க்கப்பெற்றதுபோலும். இவர் தந்தை ஆவூர் மூலங்கிழார் ஆவார். குமணனுக்கும் இளங்குமணனுக்கும் இருந்த மாறுபாட்டைப் போக்கினர். இவருடைய பாக்கள் அகநானூற்றிலும் நற்றிணையிலும் திருவள்ளுவ மாலையிலும், யாப்பருங் கலவிருத்தியிலும் காணப்படுகின்றன.

திணை - பாடாண்டிணை. முன்னரே விளக்கப்பெற்றுளது. துறை - பரிசில்விடை. அரசன் தன் புகழைக் கூறினோர்க்குப் பரிசில் வழங்கி இன்பம் மிகும்படி அவர்களுக்கு விடை கொடுத்தலாம்.

மன்னா - (எப்பொருளும்) நிலையாத. மன்னுதல் - நிலைபெறுதல். நிறீஇ - நிறுத்தி. இன்மையின் இரப்போர்க்கு - வறுமையால் யாசிப்பவர்க்கு. தொன்மை மாக்கள் - (வண்மையையுடைய) பழைய மாக்கள். தொடர்பு - (தன் பெயரை நிறுத்தி) உலகத்தோடு தொடர்ந்துபோதல். தாள்தாழ் படுமணி - காலின்

கண் தாழ்ந்த ஓசையையுடைய மணி. இரட்டும் - ஒன்றற்கொன்று மாறி யொலிக்கும். ஆடியல் யானை - வெற்றியோடு பொருந்திய யானை; அசையும் இயல்புடைய யானையுமாம். அருகா - குறையாமல் கொடுக்கின்ற. வயமான் - வலிய குதிரை. கொன்னே - யாதொரு பயனுமின்றி. இன்னாது - துன்பமானது. பாடு - பெருமை. ஆடுமலியுவகை - வென்றி மிக்க மகிழ்ச்சி. ஓடா - தளராத. பூட்கை - மனக் கொள்கை. கிழமையோன் - இங்கு தமையனைக் குறிக்கும். வந்தேன் என்றது வருவல் என்றது காலமயக்கம்.

5. இச்செய்யுளை இயற்றியவர் சேரமான் கணைக்காலிரும்பொறை. இவர் சோழன் செங்கணனொடு போர்செய்து பிடிக்கப் பட்டுக் குடவாயில் கோட்டச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது தண்ணீர் தாவென்று காவலாளரைக் கேட்டனர். அவர்கள் உடனே தாராது தாழ்த்தனர். அங்ஙனம் தாமதித்துத் தந்த நீரை மானத்தால் பருகாது கையில் கொண்டிருந்து இச் செய்யுளைக்கூறித் தம் கருத்தை வெளிப்படுத்தி இறந்தனர்.

திணை - பொதுவியல் - முன்னரே விளக்கப்பெற்றுளது. துறை - முதுமொழிக்காஞ்சி - அஃதாவது அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம் பொருள் இன்பத்தை அறியச் சொல்லுதலாம்.

குழவி - குழந்தை. ஊன்தடி - தசைத்தடி. அஃதாவது மணை போன்ற தோற்ற முடையது. தொடர்ப்படு ஞமலி - சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய். இரீஇய - இருத்திய, தங்கவைத்த. கேளல் கேளிர் - கேளல்லாத கேளிர் - சிறைக்கோட்டங் காவலர். வேளாண் சிறுபதம் - உபகாரத்தால் வந்த தண்ணீர். மதுகை - வலிமை. ஈன்மரோ - பெறுவார்களோ?

ஆசாரக் கோவை

ஆசாரக்கோவை என்பது ஆசாரங்களைப்பற்றிக் கூறுகின்ற பல பாக்களின் கோவையாகும். இந்நூல் கடைச்சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது தற்சிறப்புப் பாயிரம் நீங்கலாக நூறு வெண்பாக்களையுடையது. வெண் பாக்களின் பலவகைகள் இந்நூலிற் காணப்படும்.

இந்நூலாசிரியர் கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார் ஆவார். இவர் சைவ சமயக் கோட்பாடுடையவர்.

இந் நூலிலுள்ள பாக்களை முற்காலத்திருந்த உரையாசிரியர்கள் மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளார்கள். இதிற் கூறப்பட்டுள்ள ஆசாரங்கள் பெரும்பான்மையாய் வடமொழியிலுள்ள நீதி நூல்களிலிருந்து தொகுக்கப் பெற்றவையென வட நூற் புலமை யாளர்கள் கூறுகின்றனர்.

இந் நூல் கடைச்சங்க நூலாதலின் இந்நூலாசிரியர் காலம் கடைச்சங்க காலமாகும். அஃதாவது 1800 வருடங்கட்கு முன்பு என்பர்.

1. பொறை - பொறுமை. இன்னாத - துன்பமானவை. ஒப் புரவு - உலக நடையை அறிந்து செய்யும் உபகாரச் செயல். ஒப்பு - பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவை. உரவு - ஞானம். ஆற்ற - மிகுதியாக, நன்றாக. ஆசாரவித்து - ஆசாரங் கட்குக் காரணம்.

2. வைகறை - விடியற் காலமாகிய பின் ஜாமம். அஃதாவது இரவின் கடைசிப் பத்துநாழிகை. ஒண்பொருள் - சிறந்த பொரு ளுக்கு வருவாயாகிய காரியத்தை. வாய்வதில் - உண்மையில், தப் பாமல், பழுதின்றி. முந்தையோர் - அறிவுடைய பழையோர்.

3. உடுத்தலால் - உடுத்து + அலால். விழுத்தக்கார் - விழு மந்தக்கார். (விழுமம் - பெருமை, சீர்மை) பெருமையின் தகுதி யுடையவர்.

4. குறளை - கோள் சொல்லுதல். வெளவல் - பிறர் பொரு ளைக் கவரவேண்டும் என்னும் ஆசை. அழுக்காறு - பிறர் ஆ

கத்தின்கண் பொருமை. ஐயம்தீர்காட்சியார் - தெளிந்த அறிவினை உடையவர். ஐயம் - பிச்சை. நிரயம் - நரகம். செற்று - கெடுத்து, அழித்து.

5. படிறு - வஞ்சனை உரை. பட்டியுரை - வாய்காவாது வேண்டியபடி பேசும் பேச்சு. வசை - பழிப்புரை. புறன் - புறங்கூறுதல், (காணுத வழி பிறரை இகழ்ந்துரைத்தல்) அசையாத - தளராத.

6. பொய்யாய பரந்துரையார் - பொய்யாய சொற்களைப் பரக்க உரையார். பாரித்து - பரப்பி - விரிவாக்கி. ஒருங்கு எனைத்தும் - எல்லாவற்றையும், ஒருசேர. பொருளடங்க - பொருள் விளங்கும் வகையாக. செவ்வி - சமயம்.

7. அன்பின் செறப்பட்டார் - அன்பினின்றும் வேறுபட்டவர். செறுதல் - கோபித்தல்.

8. அளை - புற்று. முழை உறை சீயம் - குகையில் வாழும் சிங்கம். பயின்றவை - பழகியவை. இழுக்கம் - துன்பம்.

9. முறுவல்இனிதுரை - முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல். கால்நீர் - கால் கழுவுதற்குத் தரும் நீர். கிடக்கை - படுத்துக்கொள்ளுதற்கு ஏற்ற இடம். தலைச் சென்ருர்க்கு - தம்மிடம் வந்த விருந்தினர்க்கு. ஊணுேடு - உணவுடன்.

10. தாரம் - மனைவி. அடைக்கலம் - அடைக்கலமாகப் பிறரால் ஒப்பிக்கப்பட்ட பொருள். உன்னித்து - எண்ணி, நினைத்து. காத்துஉய்க்க - காத்து ஒழுக. விழுமம் - துன்பம்.

11. நடை - நடக்கும் நடை. சொற் சோர்வு - பேச்சில் தவறுதல். குடிமைக்கும் - குடிப்பிறப்புக்கும்.

12. நந்தெறும்பு - ஆக்கமுள்ள எறும்பு. தூக்கணம்புள் - தூக்கணங்குருவி. நல்லதங்கருமம் - நல்லனவாகிய தாம் செய்ய வேண்டிய காரியங்கள். கடைப்பிடித்து - உறுதியாகக் கொண்டு, சோராமற் கொண்டு. அப்பெற்றியாக - அம்மூன்றின் தன்மை போல. எப்பெற்றியானும்படும் - எவ்வகையாலும் அமையும்.

எறும்பின் இயல்பு - கிடையாத காலத்திற்கு உதவும்படி கிடைத்த காலத்திலேயே உரிய உணவைச் சேர்த்துவைத்துக் கொள்ளுதல்.

தூக்கணங்குருவியின் இயல்பு - குளிர், காற்று முதலியன வற்றால் துன்பம் உண்டாகாதபடி கூடுகட்டிக் கொள்ளுதல்.

காக்கையினியல்பு - ஏதேனும் உணவு கிடைத்தால் மறைக்காமல் இனத்தை அழைத்து அதனுடனிருந்து உண்ணுதல்.

III

கம்பராமாயணம்

இது கம்பரது ராமாயணம் என விரியும். கபிலரது பாட்டு என்றாற்போல ஆறும் வேற்றுமை செய்யுட் கிழமைக்கண் வந்தது.

இராமாயணம் என்பது இராம அயநம் எனப் பிரிக்கப்படும். இது வடமொழி இலக்கணப்படி ராமாயணம் என்று ஆயிற்று. தமிழ் இலக்கண முறைப்படி இகரத்தை முதலில் பெற்று இராமாயணம் என வழங்கப்படும்.

இராமன் என்னும் சொற்கு மகிழச்செய்பவன் என்றும், பேரழகு வாய்ந்தவன் என்றும் பொருளாம். அயநம் என்பதற்கு அறிவிப்பது என்பது பொருள். ஆகவே இராமாயணம் என்பது இராமனை அறிவிக்கும் நூலாகும்.

கம்பராமாயணம் என்ற சொற்றொடரினாலேயே இந்நூலை இயற்றியவர் கம்பர் என்பது புலனாகும். இவர் சோழநாட்டில் திருவழுந்தூரில் வாழ்ந்துவந்தனர். இளமைப்பருவத்தில் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலைச் சார்ந்து அவருடைய ஆதரவைப் பெரிதும் பெற்று வந்தனர். நாளடைவில் அக்காலத்தில் கிடைத்த கலைமலி நூல்களையெல்லாம் கற்று அறிவுகைவரப்

பெற்றிருந்தனர். மிக்க புலமை பெற்றிருந்ததோடு நாவீறும் பெற்றிருந்தனர். இவருடைய கவிபாடும் இயல்பைக் கண்டவர்கள் இவரைக் கவிச் சக்கரவர்த்தி என்று அழைக்கலாயினர். இவருடைய கல்வியின் மேம்பாட்டைக் 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்னும் பழந்தொடர் நன்கு புலப்படுத்தும்.

கம்பர் என்ற பெயரைச் சிலர் இயற் பெயரென்றும், மற்றுஞ் சிலர் காரணப்பெயர் என்றும் கூறுவர்.

இவருடைய காலத்தை ஒன்பதாம் நூற்றுண்டு என்றும், பன்னிரண்டாம் நூற்றுண்டு என்றும் ஆராய்ச்சியாளர் பகர்வர்.

தமிழ் நாட்டில் என்றும் நின்று நிலவுவதாகிய இராமாயணச் சரிதையைக் கம்பர் பற்பல அழகுகள் அமையுமாறு பாடியுள்ளார். இவருடைய பாடல்களைப் பயில்பவர் இவர்க்குச் சிந்தாமணி, திருக்குறள், புறநானூறு, ஆழ்வார் பாசுரங்கள் முதலியவைகளில் மிக்க பயிற்சி உண்டு என்பதை எளிதில் அறியலாம்.

இராமாயணக் கதைக்கு இவர் முதல் நூலாகக் கொண்டது வான்மீகி ராமாயணமாகும். அந் நூலைத் தம்முடைய நூலுக்கு முதல் நூலாகக் கொண்டாலும், அதை ஒரு சிறிதும் விடாது முற்றும் அநுசரித்தார் என்று கூறுவதற்கில்லையென வடமொழி தென்மொழியாகிய இருமொழியிலும் வல்லுநர் கூறுவர்.

கம்பரது ராமாயணத்தில் உள்ள முதல் ஆறு காண்டங்களும் கம்பரால் இயற்றப் பெற்றவை. ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தை இயற்றியவரை ஒட்டக் கூத்தரென்று சிலரும், வாணிதாசனென்று சிலரும் கூறுவதுண்டு.

கம்பர் தம்மை இளமையில் ஆதரித்துவந்த சடையப்பவள்ளலை நல்ல சந்தர்ப்பங்களில் நன்றாகப் பாராட்டித் தமது நன்றியறிதலைச் செவ்வையாகப் புலப்படுத்தியுள்ளார்.

கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்திற்கு இட்ட பெயர் இராம அவதாரம் என்பதாகும். இவர் பாடிய வேறு நூல்கள் ஏரெழுபது, சடகோபரந்தாதி முதலியனவாம்.

மந்திரப் படலம்

மந்திரம் - ஆலோசனை. படலம் - காண்டத்தின் உட்பிரிவு. **காண்டம்** - நூலின் பெரும் பிரிவு. மந்திரப் படலம் அயோத்தியா

காண்டத்திலுள்ள முதற்படலமாகும். இப்படலத்துள் தசரத சக்கிரவர்த்தி தன் திருமகனாகிய ஸ்ரீராமருக்கு முடிசூட்டக்கருதி வசிட்ட முனிவரோடும் சுமந்திரன் முதலிய அமைச்சர்களோடும் ஆலோசித்த செய்தியைப்பற்றிக் கூறப்படும்.

1. வான் - மூலப்பிரகிருதி. வரம்பு - எல்லை. மாபூதத்தின் - ஐம்பெரும் பூதங்களாகிய. வைப்பு எங்கும் - இடமெங்கும். கூனும் - கூனியாகிய மந்தரையும். சிறிய கோத்தாயும் - சிறிய தாயாகிய கைகேசியும். இடுக்கண் - துன்பம். கோல் - செங்கோன்மை. துறந்து - விட்டு. வேந்து உளன் என்ப என முடிக்க.

2. அவனி - பூமி. கன்னமூலம் - காதின் அடிப்பாகம். கழற - சொல்ல. கன்னமூலத்தில் தோன்றிய நரையை உபதேசிப்பதாகக் கூறியது தற்குறிப்பேற்றவணியாம்.

3. அணுகிற்று - நெருங்கிவந்தது, சேர்ந்தது. பாங்கில் - தன்னிடத்தில். படிமக்கண்ணடி - வடிவைக் காட்டும் கண்ணாடி.

4. மண்ணுறு முரசினம் - மார்ச்சனையமைந்த பேரிகைக் கூட்டம். பண்ணுறு - அலங்கரிக்கப்பட்ட, பருமம் - யானையின் மேலிடும் தவிசு. கண்ணுறு - பார்க்கத்தக்க - கவரி - சாமரை. எண்ணுறு-ஆலோசிப்பதற்கேற்ற. சூழ்ச்சியின் இருக்கை - மந்திராலோசனைச் சபை.

5. நிருபர் - அரசர். பொருவுஇல் - ஒப்பில்லாத. பக்கமும் - சிநேகிதர்களையும். பரிவின் - அன்புடன். ஒக்கநின்று - (யாவரிடத்தும்) சமமாக நின்று. சக்கரத்தவன் - சக்கரபாணியாகிய திருமால்.

6. தாளம் - முத்து. அந்தரம் - ஆகாயம், இமையவர் குரு - தேவகுருவாகிய வியாழ பகவான். மந்திரக்கிழவர் - மந்திராலோசனைக்குரிய அமைச்சர்.

7. பூவரு - அழகு பொருந்திய. பொலம்கழல் - பொன்னாலாகிய வீரக்கழல். முனி - வசிட்டமுனி.

8. நலம் - தமக்கு வரும் நன்மைகள். சலம் - வஞ்சகம், கோபம்.

9. உறுபொருள் - மேல் விளையும் காரியத்தை. உணருங்கோளார் - அறியும் புத்திவன்மையுடையவர்கள். வினையின்

வந்தது - பழவினையால் வந்தது. பெற்றியர் - திறமையுடையவர். மானம் நோக்கில் - மானத்தை நோக்குமிடத்து. கவரிமா - கவரி மான். நீரார் - தன்மையுடையவர்.

10. நூல்உற - அரசநீதிகளுக்கு ஏற்ப. தெய்வம் நுணித்து - தெய்வாநுகூலத்தை நுட்பமாக ஆராய்ந்து. அறம் குனித்த - இராஜ தருமத்தைப் பெருக்கிய. சீலம் - நல்லொழுக்கம். பால் வரும் - பாங்காக வரும்.

11. உறுதி - நன்மை. வெம்மை - கோபத்தின் கொடுமை. செம்மை - நன்மார்க்கம். திறம்பல் செல்லா - தவருத. தேற்றத் தார் - தெளிவு உடையார். மும்மையும் - முக்கால காரியங்களையும். ஒருமையே - ஒருமையாகவே.

12. நாடி - சிந்தித்து, எல்லையில் - முடிவில், மருத்துவன் - வைத்தியன். ஒல்லை - விரைவில். உற்ற பெற்றியில் - நேர்ந்த காலத்தில். சூழ்ச்சியார் - ஆலோசிக்குந் திறமுள்ளவர்கள்.

13. ஆண்தகை - ஆண்மையாகிய குணமுள்ளவன் (அரசன்). உறுதியில் - நன்மை பயக்கும் விஷயத்தில், உணர்வு - அறிவு. உன்னலாம் - கருதத்தக்க. திருவின் பெட்பினர் - அரசச் செல் வத்தைப் பெருக்குவதில் விருப்ப முள்ளவர்கள்.

14. அந்தம் இல் அறிவனை - முடிவில்லாத பேரறிவுடையவ னாகிய வசிட்ட முனிவனை. இறை இடை - இருக்கைகளில், ஆசனங்களில்.

15. ஆண்டையில் - அச்சமயத்தில், மரபின் - முறையாக, கேண்ம் - கேளுங்கள். இது கேண்மின் என்பதன் விகாரம்.

16. வெய்யவன் - சூரியன். மேலவர் - பெரியோர். திறம்பல் - வழுவுதல். வையம் - உலகம். அரோ - அசை.

17. அமைவு - பொருந்துதல். கைதர - தழைக்க.

18. இருபியல் அனந்தன் - பெரிய பிடரியையுடைய ஆதி சேஷன். பெரும் பெயர்கிரிகள் - மிக்க புகழ்பெற்ற குலமலைகள். பெயர - பாரம் நீங்கியிருக்கும்படி. பொறை - ராஜ்ய பாரம். ஆற்ற - தாங்க, ஆற்றலேன் - சக்தியுடையவன் அல்லேன்.

19. குரவர்கள் - பெரியோர்கள். நவை - குற்றம். தரணி - பூமி. வெம்குலம்புலன்கெட - கொடிய கூட்டமாகிய ஐம்புல ஆசை

ஒழிய. வீடு - மோட்சம். எங்கு உலப்புறுவர் - எங்கு எண்ணி முடிவு பெறுவார்கள்.

20. வெள்ளம்நீர் - கடல். நாகரில் - நாகலோகத்தில். கரந்து உறை - மறைந்து வசிக்கின்ற. உள்ளுறை பகைஞர்க்கு - உட்பகைவர்க்கு. உட்பகை - காமம், வெகுளி, மயக்கம் என்பன. ஒதுங்கி - அஞ்சி.

21. பஞ்சி - செம்பஞ்சிக் குழம்பு. பாவை - பாவைபோன்ற கைகேயி. கோல் கொள - சாட்டைக் கோலைக் கொண்டு சாரத்தியஞ் செய்ய. இழுதை - பேய். அஞ்சுதேர் - மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறி.

22. ஒட்டிய - வீரவாதம் கூறி எதிர்த்த. பரமஞானம்போய் தெட்டவர் அல்லரேல் - பரம ஞானம் சித்தியுற்று தெளிந்தவரல்லராயில். செல்வம் ஈண்டு என விட்டவர் - செல்வங்கள் இவ்வுலகத்திற்கு உரியவையே என்று எண்ணி அவற்றிலுள்ள பற்றுவிட்டவர். யாவர் வீடுளார் - யாவர் மோட்சத்தை அடைவார்.

23. இம்மை - இப்பிறப்பில். துறப்பு - துறத்தல் (பற்றுக்களை ஒழித்தல்.)

24. பெருஞ்சிறை - பெரிய சிறகு. துறவும் தெளிவுமாகிய இரண்டு பெருஞ் சிறகுகள். இருஞ்சிறை - பெரிய சிறைச்சாலை.

25. துளிவரும் - துள்ளிவரும், நெருங்கி வருகின்ற. நனி வரும் - மிகுதியாக வருகின்ற. தனியரசாட்சி - மோட்சம். தாழும் - விரும்புகின்ற.

26. ஓம்பி - பாதுகாத்து. இம்மையினுதவி - இவ்வுலகத்திற்கு வேண்டிய காரியங்களில் உதவி செய்து. நல்இசை நடாய - நல்ல புகழை உண்டாக்கிய. அம்மையும் உதவுதற்கு - மறுமை இன்பத்தையும் உதவுதற்கு. அமைய வேண்டும் - உடன்படவேண்டும். ஆல் - அசை.

27. இழைத்த - செய்த. கடக்கும் - தப்பவேண்டும் என்கின்ற. குழைத்தது - அமைக்கப்பட்டதாகிய. கோடல் - பெற்றுக் கொள்வதை.

28. கச்சை - (யானையின்) கழுத்திலிடுங் கயிறு. கடகரி - மதயானை. பிச்சம் - பீலிக்குஞ்சங்கள் (அஃதாவது மயில் தோகையாலாகிய அலங்காரத் தொங்கல்) கவிகை - வெண்கொற்றக்குடை.

29. வரம்பு இல் காலம் - அளவற்ற காலம். நீக்குவான் - தீர்க்கும்பொருட்டு. உய்ந்தனன் போவது - கடைத்தேறிப்போவ தாகிய.

30. செருக்களத்து - போர்க்களத்து. அறம் தலை - தரும மார்க்கத்தில். ஓர் சொல் - ஒரு பழிச் சொல்.

31. என் வயின் - என்னிடத்தில். அவனி மாது - பூமிதேவி.

32. நிவப்பு உறு - உயர்வு பெற்ற. உவப்பு உறு - விரும்பத் தக்க. தாழ்ப்பது - தாமதிக்கச் செய்வது. அரோ - அசை.

33. பேதமைத்துஆய் - அறியாமை காரணமாய். நீக்குவான் - நீக்குவதற்கு. தொடங்கிய - தொடங்க.

34. வெருண்டு - பயந்து. விம்முறுநிலை - இரங்குதற்கு உரிய நிலை. ஆ - பசு. இரண்டு கன்று - மூத்ததும் இளையதுமான கன்று கள். இவை முறையே தசரதனுக்கும் இராமனுக்கும் உவமை.

35. பெருநில வரைப்பு - பெரிய நில உலகம். மன்னும் - பொருந்தியிருக்கின்ற. மன் உயிர் - நிலைபேறுடைய உயிர். விதியது வலியினும் - விதி பலத்தினாலும்.

36. பரிந்த சிந்தனை - அன்புகொண்ட மனம். பொது உற நோக்கி - பொதுவாகப் பார்த்து. திசை முகன் மகன் - பிரமதேவ ருக்குப் புத்திரனாகிய வசிட்ட முனிவன்.

37. நேமி - ஆணையாகிய சக்கரம். இனி கடவ - இனி செய் யத்தக்கதாகிய.

38. அடுக்கும் - தகும். வண்ணம் மேகலை - அழகிய மேகலா பரணம். நீதந்த கழலோன் - நீ பெற்ற வீரக் கழலை யணிந்த ராமன்.

39. புறத்து - புறத்ததாக (இதுவரையில் கூறியதற்குவேறாக) எவன் - யாது. யாவையும் பிறத்தி - எல்லாப் பொருள்களையும் உண்டாக்கி. துடைக்கும் - அழிக்கும்.

40. பொன் உயிர்த்த - அழகைப் பெற்ற. பூமடந்தையும் - இலக்குமியும். புவி எனும் திருவும் - பூமிதேவியும். உயிர்த்துணை - பிராணநாயகன். புல்லிது - தகுதியில்லாதது. தன் பயந்து எடுத்த - தன்னைப் பெற்றெடுத்த. உரவோய் - அறிவின் திட்பமுடையோய்.

41. வாரம் - அன்பு. வைகலும் - தினந்தோறும். அனையான் பேரினல் - அந்த ராமனது திருநாமத்தை உச்சரிப்பதால். பெயர்கின்ற பயத்தால் - நீங்குகின்ற பயனுள்ளதால். இடையுறு - இடையூறு என்பதன் விகாரம்.

42. மண்ணினும் நல்லள் - பூமிதேவியினும் நல்லவள். மலர்மகள் - இலக்குமி. கலைமகள் - சரஸ்வதி. கலையூர்பெண் - பார்வதி. கலை - மான். ஜனகியோ மண்ணினும் நல்லள்; மலர்மகள், கலைமகள் கலையூர் பெண்ணினும் நல்லள். நல்லள் கண்ணினும் - அத்தகைய நல்லவளாகிய சீதையினுடைய கண்களைக் காட்டினும். நல்லன் - இராமன் நல்லவன்.

43. அற்றம் - துன்பம். உறுபொருள் அறியின் - சிறந்த காரியத்தை ஆராயுமிடத்து. புனிதம் - பரிசுத்தம், தூய்மை.

44. பிஞ்ஞகன் - சிவபெருமான். இற்ற - ஒடிந்த. எறிமழு வாளவன் - வீசுகின்ற மழுப்படையை உடைய பரசுராமன். மழு - குந்தாலிப்படை. இழுக்கம் - தோல்வி.

45. அருள் வழியின் - அருளினல். தனியன் - அடியேன். நானிலம் - நால்நிலம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

46. எந்தை - என் தந்தை போன்றவனே. வேள்வி - யாகம். இருவினை - புண்ணிய பாவங்கள்.

47. பணித்திலன் - சொல்லாதவனுய். முகத்தால் எழுதி நீட்டிய - முகத்தால் எழுதிக்கொடுத்த, அஃதாவது முகத்தால் குறிப்பித்த. இங்கிதம் - குறிப்பான கருத்தை. இறைமகற்கு ஏற்க - சக்கரவர்த்திக்குப் பொருந்த.

48. தொல்லோர் - பெரியோர். அறத்தின் ஊங்கு - தருமத்தைக் காட்டினும்.

49. புரசை மாகரி - கழுத்துக் கச்சையை யுடைய பெரிய யானைச்சேனை. நிருபர்க்கும் - அரசர்க்கும். புரத்து உறைவோர்க்கும் - நகரத்தில் வாழ்கின்ற ஜனங்களுக்கும். அடுத்தது - பொருந்திய தவம்.

50. நம்பியை - இராமனை. நளிமுடி - பெருமை வாய்ந்த கிரீடம். நின்றது செய்வது - பின்னர் செய்ய நின்றதைச்செய்க.

செய்வது - ஒருவகை வியங்கோள், இதைச் செய்யத்தக்கது எனக் கொள்ளுதலுமாம்.

51. அலங்கல் - பூமாலை. அவன்மனம் அனையான் - அத் தசரதன் மனம்போன்ற சுமந்திரன். விலங்கல் மாளிகை - மலை போன்ற மாளிகைகள். தளிர்ப்பான் - மனம் மகிழ்பவன். பொலம்-பொன்.

52. குரிசில் - இலக்குமணன். மருங்கு - பக்கத்தில். அண்ணல் - இராமபிரான். நறவு - தேன்.

53. கடல் உடை - கடலை ஆடையாக உடைய பூமி, இது அன் மொழித்தொகை. புண்டரீகம் - செந்தாமரை. புரவலன் - அரசனாகிய இராமன். பொருக்கென - விரைவாக. பொருக்கு, விரைவுக் குறிப்பு. கொண்டல் - மேகம் (நீரைக் கொண்டிருப்பது என்பது பொருள்).

54. முறையின் - வரிசையாக. மொய்ம்முகில் - நெருங்கிய மேகம். இறை - முன்கை. குஞ்சி - குடுமி.

55. பணை - வாத்திய ஒலிகள். நிரந்தன - நிரம்பின. அனங்கன் - மன்மதன். கறங்கின - ஒலித்தன. நிறைபேர் அணை - மன அடக்கமாகிய பெரிய அணை. நிரந்தன - நிரம்பிக்கடந்தன. பிணை - பெண்மான்.

56. நீள்எழு - நீண்ட தூண்கள். வாயினும் - வாயில்களினும். குழை - குண்டலங்கள். ஆளகத்தினோடு - அவிழ்ந்த கூந்தலோடு. அளகம் ஆளகமென நீண்டது. அரமியத்தலம் - உபரிகை, மேல் மாளிகை. அரத்தவேல் - இரத்தம்படிந்த வேலாயுதம். மயங்க - கலந்து நிற்க. சாளரம் - பலகணி, ஜன்னல். தாமரை மலர்கள் என்றது பெண்கள் முகங்களை. வாள்முதலியவை முகத்தாமரையிலுள்ள கண்களை உருவகமாகக் குறித்தன. சில பெண்கள் மேல் மாடத்திலும், சில பெண்கள் சாளரங்களிலுமிருந்து வீதியிற் செல்லும் இராமரைப் பார்த்தனர் என்பது கருத்து.

57. வரைபுரை - மலைபோன்ற, அகலத்துள் - மார்பிலுள்ள. அலங்கல் - மாலை. தொண்டை வாய்ச்சியர் - கொவ்வைக்கனி போன்ற வாயையுடைய பெண்கள். கெண்டை - விழிகளாகிய கெண்டை மீன்கள்.

58. தூய - பரிசுத்தனாகிய. தம்பி - இலக்குமணன். அகம் குளிர் - மனம் குளிர்ந்திருக்கிற. இருந்துழி - இருந்த இடத்தில். இருந்த உழி என்பது இருந்துழி என்று தொகுத்தல் விகாரமாயிற்று.

59. வாள் உழவன் - வாட்போரில் வல்லவன், தசரதன். கவிர்வாய் - முருக்க மலர் போன்ற சிவந்தவாய். கொண்கன் - கணவன்.

60. நளிநீர் - கடல். நிலையிட - அளவிட்டறிய. நினைந்தான் - நினைந்து, முற்றெச்சம். விலங்கல் அன்ன - மலைபோன்ற.

61. இரீஇ - இருக்கச்செய்து, அளபெடை. நின்பயந்து எடுத்த - உன்னைப் பெற்றெடுத்த. விரைவது ஒன்று - விரைந்து நிகழவேண்டிய செயல் ஒன்று.

62. சாலவும் அலசினன் - மிகவும் வருந்தினேன். மெய்யது ஆயது - உடம்பில் தோன்றிவிட்டது. பெரும்பரம் - பெரிய பாரம். தொய்யல் - துன்பமான.

63. இருமையும் - இம்மை மறுமை இன்பங்களையும். கட்டுரை - உறுதி வார்த்தை. கோடி - கொள்வாயாக.

64. ஐந்தொடாகிய - பஞ்சேந்திரியங்களால் உண்டாகிய. ஈண்டு ஒடு உருபு, ஆல் உருபின் பொருளது. முப்பகை - காமம், வெகுளி, மயக்கம். மருங்குஅற அகற்றி - இருந்த இடம் தெரியாமல் நீக்கி. உலவார் - குறையார்.

65. இடும்பையில் - துன்பத்தில். பயத்தினில் - பயனால்.

66. ஒருத்தலைப்பரத்து - ஒரு பக்கம் பாரத்தையும். ஒருத்தலை - மற்றொரு பக்கத்தில். பங்கு இல் - அப் பாரத்திற்குச் சரியான மற்றொரு பங்கில்லாத. ஊர்தி எருத்தின் - பொதிமாடு போல. இனி ஒருத்தலைப் பங்குவின் என்பதற்கு ஒரு பக்கத்து நொண்டியாயிருக்குந் தன்மையையுங் கொண்ட எனவும், ஊர்தி எருத்து என்பதற்கு வண்டியிற் பூட்டிய காளை யெனவுங் கூறுவர். வரம்பு அறுதிரு - எல்லையற்ற மோட்ச செல்வம். அருத்தி - ஆசை.

67. ஆளும் நல் நெறிக்கு - பெறத்தக்க நல்ல பரகதி வழிக்கு. அமைவரும் - ஏற்றதான. அமைதி - தன்மை. நம்குல நாயகன் -

நமது குல தெய்வமாகிய நாராயணமூர்த்தி. மீள்வு இல் இன் உலகு - அடைந்தோர் மீளாத முத்தி உலகு. ஒருமகன் - பகீரதன்.

68. பொன்னின் வார்கழல் புரந்தரன் போலியர் - பொன்னாற் செய்த நெடிய வீரக்கழலை யணிந்த இந்திரனைப்போன்றவர். மாதவம் தொடங்கி நோன்பு இழைத்தவர் - பெரிய தவத்தைத் தொடங்கி விரதங்களை அனுஷ்டித்தவர். சொல்மருமகன் - சொல்லை மறுக்காத புத்திரன். சொல்மரு மகனைப் பெற்றவர் துயர்துறந்தவர்; மற்றவர் துயர் துறந்தவரல்லர் என்பது கருத்து.

69. பெரும்பரம் - பெரிய ராஜ்யபாரம். வினையின் - சூழ்ச்சியாக, தந்திரமாக. என்வயின் - என்னிடத்தில். புரக்க - பரிபாலிக்க.

70. அப்பரிசு - அத்தன்மை. காதலுற்றிலன் - விரும்பினானில்லை. கடன் - கடமை.

71. குரிசில் சிந்தையை - இராமனது மனக்கருத்தை. சுருதியன்ன - வேதத்தைப் போன்ற. மந்திரச் சுற்றம் - மந்திரிகளின் கூட்டம்.

72. நிவந்த - மேலான. உவந்த - (தன்னைக் கண்டு) மகிழ்ந்த. உழை உழை தொடர - அருகே தொடர்ந்து வர. சுந்தரம் - பேரழகு.

73. உவணம் வீற்றிருந்த - கருடனது வடிவம் சிறப்பாகப் பொருந்தியுள்ள. பெறல் அரும் இலச்சினை - பெறுதற்கரிய முத்திரை. பொன்திணிந்ததோடு போக்கி - பொன்மயமான திருமுகத்தை அனுப்பி. தோடு - ஓலை. சித்திரம் - அழகிய, வியக்கத்தக்க. வரன்முறை - கிரமமாக.

74. ஒள்ளிது - நல்லது. திருவும் பூமியும் - ஐசுவரியமும் ராஜ்யமும்.

75. இன்நறவு - இனியமது. உவகை - மகிழ்ச்சி. விண் அகம் - சுவர்க்கலோகம்.

76. முறை முறை - வரிசை வரிசையாய். அத்த - ஐயனே.

77. மூவெழு முறைமை - இருபத்தொரு தலைமுறை.

பூ எழுமழு - கூர்மை மிகுந்த மழுவாயுதம். சேவகன் - பராக்கிரம சாலியாகிய பரசுராமர். சேவகம் - வீரம். செகுத்த - அழித்த. ஆவ - ஆகக்கடவது.

78. வேறுஇலா - வேறுபடாத. மாறும் ஓர் அளவைசால் வாய்மை - மற்றும் ஓர் பிரமாணமொழி.

79. பொம்மல் வாசகம் - மகிழ்ச்சிக்கு ஏதுவான பொலிவாகிய மொழி. உள்ளம் நோக்கியோ - என் கருத்துநோக்கியோ. தகல் - தகுதி.

80. வேந்து அவை - அரசர் சபை. ஆற்ற - மிகவும். எவ்வம் இல் - குற்றமில்லாத.

81. தகவும் - ஒழுக்கமும். தன்மைசேர் ஞானமும் - மேன்மை பொருந்திய மெய்யுணர்வும். ஈனம்இல் - குறைவற்ற.

82. ஊருணி - குளம். மாடு - நடுஇடம். பார் - ஊரில். கெழு - பொருந்திய. பார் மாடு கெழு உயர்பயன்மரம் எனக் கூட்டுக. பழுத்தற்றுகவும் - பழுத்ததாகவும்.

பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்.
ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

என்னும் குறட்பாக்களின் சொல்லும் பொருளும் தழுவி வந்தமை காண்க.

83. பணிஅவாம் - பணிபோன்ற. பருமம் - யானைமேலிடும் தவிசு. நினை - உன்னை. அவாம் தன்மையை - விரும்பும் தன்மையை. நிமிர்ந்த - மிகுதியாகக்கொண்ட.

84. மொய்த்து பொழிந்த - நெருங்கிச் சொரிந்த. கழிந்தது ஓர் இடரினன் - நீங்கிய ஒப்பற்ற துன்பத்தையுடையவன். இது வடமொழி நடை. ஒப்பற்ற துன்பம் நீங்கப்பெற்றவன் என்பது தமிழ் நடை.

85. செம்மையின் - நடுவுநிலையினாலும். தீங்கின் பால்வெம்மையின் - தீயவைகளிடத்துக் கடுமையாகக் காட்டும் வெறுப்பினாலும். கையடை - அடைக்கலம்.

86. புரைதபுநாள் - குற்றமற்றநாள். உரை தெரிகணிதர் - சோதிடநூலை அறிந்தவரான சோதிடர்கள். வரைபொரு - மலை போன்ற.

87. நீள்கலை - நீண்ட ஆடைகள். ஈண்ட - நெருங்க. இட்டு இடை இற்றிலர் - சிறிய இடை ஒடியாதவர்களாய்.

88. பண்டையினன்றி - முன்புபோலில்லாமல். கரம் சூடுகின்றனர் - அஞ்சலி செய்கின்றவர்கள். மாடு - (கோசலையின்) சமீபத்தில்.

89. கொண்டல் வண்ணனை - நீலமேகவர்ணனாகிய இராமனை. நல்கிய - பெற்ற. தொண்டைவாயினிர் - கொவ்வைக்கனிபோன்ற வாயை யுடையவர்களே. பேர் உவகை பொருள் - பெரிய சந்தோஷச் செய்தி.

90. மன் - அரசர்கள். நேமியான் - சக்கிரவர்த்தி. தொல் நெடுமுடி - பழமையாகிய பெரிய கிரீடம்.

91. மகற்கு செல்வம் சிறக்கும் என - மகனாகிய இராமனுக்கு அரச செல்வம் சிறக்கும் என்று. பெட்புஅற - விருப்பம் நீங்கும் படி. வறக்கும் - வற்றச் செய்கின்ற. மாவடவைக்கனல் ஆனது - பெரிய வடவாமுகாக்கினி ஆனது. மன்னவன் - தசரதன். துறக்கும் - துறந்து செல்வான். துணுக்கம் - அச்சம். துணுக்கம் உவகைக்கடல் வறக்கும் வடவைக்கனல் ஆனது என்க.

92. நனி நல்கி - மிகுதியாகக் கொடுத்து. நேமியான் - கையில் சக்கராயுதத்தையுடைய ஸ்ரீ ரங்கநாதன். மேவு இடம் - எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை.

93. மலராள் - திருமகள். நிலமாது - பூமிதேவி. முதல் - முதலும். மா உலாம்மலர் - வண்டுகள் உலாவுகின்ற தாமரை மலர்.

94. என்வயின் தரும் மைந்தற்கு - என்னிடம் நீ தந்த மைந்தனாகிய இராமனுக்கு. தரும் - பிறந்த எனினுமாம். இனி - இப்போது. அருள் - கருணை செய்வது. உன் வயத்தது - உன்னைச் சார்ந்தது. மன் - பெருமை, நிலைபெற்ற.

95. அ இந்திரை கேள்வனுக்கு - அந்த இலக்குமி நாயகனாகிய திருமாலுக்கு. ஒன்றும் - தகுதியான. அவண் - அவ்விடத்திலுள்ள. தவர்க்கெலாம் - தவசிகளுக்கெல்லாம். அவள்

நல்ல தவர்க்கெலாம் என்றும் பிரிக்கலாம். பசுவின் கடல் - பசு வாகிய கடலை - கடல்போல் மிகுந்த பசுக்களை.

96. புனைசாந்தம் - பூசும் சந்தனம். காசினி ஈட்டம் - பூமியின் கூட்டம். தளிர் ஆடை - தளிர்போன்ற வஸ்திரம்.

97. நாயகன் - திருமால். புல்லி - தழுவி. புரையிலா - குற்ற மில்லாத. மல்லல் - வளப்பம். வலம்கொளா - வலமாகச் சுற்றி.

IV

வில்லிபுத்தூரார் பாரதம்

ஆதிபருவம் - குருகுலச் சருக்கம்

பாரதம் என்பதற்குப் பரதனது மரபில் பிறந்தவரது சரித் திரத்தைக் கூறும் நூல் என்பது பொருள். இது தத்திதாந்த நாமம். இப்பரதனென்பவன் சந்திரவம்சத்தரசனாகிய துஷ்யந்தன் மகன்.

பாரதத்தை முதன்முதலில் வடமொழியிலியற்றியவர் வேத வியாசமுனிவர். பாரதம் வேதங்களோடு வைத்து எண்ணப்படும் பெருமையுடையது.

சங்கப் புலவராகிய பெருந் தேவனார் என்பவர் முதலில் தமி ழில் வெண்பாவில் பாரதத்தைப் பாடினர். அந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை.

பின்னர் நந்திவர்மன் என்னும் பல்லவ அரசன் காலத்திருந்த பெருந்தேவனார் என்பவர் தாமும் வெண்பாவில் பாரதக் கதை யைப் பாடினர். அந்நூலும் இப்பொழுது முற்றுங் கிடைக்க வில்லை. இந்த இரண்டு பெருந்தேவனார் பாடிய இரு நூல்களும் இடை இடையே உரை நடையை உடைய நூல்களாகும்.

இவர்களுக்குப் பின்னர் திருமுனைப்பாடி நாட்டில், சனியூரில் வீரராகவர் என்னும் வைஷ்ணவ அந்தணர்க்குக் குமாரராகப் பிறந்த வில்லி புத்தூர் ஆழ்வார் பாரதத்தை விருத்தத்தில் பாடினார்.

இவர் கொங்கர்குல வரபதியாட்கொண்டான் என்னும் அரசனது வேண்டுகோளால் இந்நூலைப் பாடினார். இவ்வரலாறு இவருடைய குமாரராகிய வரந்தருவார் இந்நூலுக்குப் பாடிய பாயிரத்தால் தெரிகிறது.

இவர் வடமொழியிலும் நல்ல பயிற்சி உடையவர். ஆதலின் வடமொழிகளை அவற்றின் பொருள்தோன்ற மொழிபெயர்த்தும், எதுகை மோனைகளுக்கு ஏற்றவாறு திரித்தும் அழகுபட அமைத்திருக்கின்றனர். இடங்களுக்கு ஏற்றவாறு சந்தங்களமைத்துப் பாடுவதில் மேம்பட்டவர். இவர் பாரதக் கதையைச் சுருக்கி ஆதி பருவம் முதலாகச் சௌப்திக பருவம் ஈருகப்பாடி யுள்ளார்.

இவர் திருமாலிடத்துக் கசிந்துருகும் மனத்தினரென்பது, திருமாலைப்பற்றி இவர் பாடிய பாக்களால் விளங்கும். மேலும் இவர் பிறமதநிந்தையற்றவரென்பதும் இவருடைய செய்யுட்களாலேயே விளங்கும்.

இவரைத் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் காலத்தவர் என்பர். இவர்களுடைய காலம் இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னதென்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

குருகுலச்சருக்கம் - குருகுலத்தவரது வரலாற்றைக் கூறுஞ் சருக்கமாகும். இச்சருக்கம் ஆதிபருவத்திலுள்ள முதற் சருக்கமாகும். பருவம் - நூலின் பெரும் பிரிவு. சருக்கம் பருவத்தின் உட்பிரிவு.

1. அமுதம் - அமிர்தம். வெண் திரை சிந்துவின் மிசை - வெள்ளிய அலைகளையுடைய திருப்பாற்கடலில். ஓ - அசை.

2. வேனிலான் - மன்மதன். ஆனமென் குளிர் புனல் - குளிர் ஆனமென் புனல் என மாற்றுக. புனல் - நீர். தூநிறம் - வெண்ணிறம். சூழல் - கரை.

3. மருவருங்குழல் - மணங் கமழுகின்ற கூந்தல். வார்குழை - வடிந்த காதுகள் (நீண்ட காதுகள்). இதழ் - உதடுகள். நகை - பற்கள். புறவடி - புறங்கால்கள்.

4. சோகம் - (வேட்டையால் உண்டாகிய) களைப்பு. தாபம் - தாகவிடாய். இச்செய்யுள் காட்சி என்னும் அகப்பொருள் துறையாம்.

5. வரைமடந்தைகொல் - மலையில் வசிக்கும் (தெய்வப்) பெண்ணோ. துய்யவண்கலை விதம்சொல் மடந்தைகொல் - பரிசுத்த மான அழகு பொருந்திய கலைஞானங்களின் பகுப்புக்களை யுடைய சரஸ்வதியோ? கலைகள் அறுபத்து நான்கு ஆதலின் கலைவிதம் என்றார். இச் செய்யுள் ஐயம் என்னும் அகத்துறைக்கு உரிய தாகும்.

6. புண்ணியம் - புண்ணியத்தின் பயன். இச் செய்யுள் துணி வும் நயப்பும் என்னும் அகத்துறைகளுக்கு உரியது.

7. போற்றிய குரிசில் - (தன்னைத்) துதித்த அரசன். புளகம் எய்த - மயிர் சிலிர்த்தல் உண்டாக.

8. கடிகொள் பான்மையை - விவாகம் செய்துகொள்ளும் தன்மையையுடையாய். உசாவினான் - (அவள் எண்ணத்தை) ஆராய்ந்தான். இகல் மின்இலை வடி கொள் வேல் - பகையை உடைய ஒளி பொருந்திய இலைத் தொழிலமைந்த கூர்மையாகிய வேல்.

9. நாணினள், ஒதுங்கினள் - நாணி, ஒதுங்கி, முற்றெச்சங் கள். சேண் உறு தனது மெய்த் தேசு - ஆகாயத்திலுள்ள தனது வடிவின் ஒளி. சேண் உறு-என்பதற்கு வெகு தூரத்தில் விளங்கு கின்ற எனலும் ஆம். வாள் நிலவு - ஒளிபொருந்திய நிலவு. வாய்மை - வார்த்தைகள்.

10. இரிந்து மெய் நடுங்கிட - அஞ்சி உடம்பு நடுங்கும்படி. புரிந்தது - செய்தது.

11. இவை மெய்தருவிதியினேன் விரதம் - இவைகள் உண்மை பொருந்திய நியமத்தையுடைய எனது விரதமாம். கைதருக - கைவழங்குக. கைவழங்குதல் - நிச்சயப்படுத்துவதற் காகச்செய்தல்.

12. மருட்டினான் - மயக்கினான். தனதன் - குபேரன். தனமகிபன் - செல்வத்தையுடைய அரசன். மன்றல் எண்ணி - விவாகஞ் செய்தலைக் கருதி.

13. அங்கி சான்று என - அக்னிசாட்சியாக.

14. மருவுற - பொருந்த. மான்விழி - அன்மொழித்தொகை.

15. வெருவி-பயந்து. கதித்தவாசகம் - சொன்ன வார்த்தை. எழுமடி - ஏழுமடங்கு. பரிவுகூர - அன்புமிக

16. முரண்டு - வெறுத்து. அவற்றினும் - அக்கொலை நிகழ்ந்த வழியும்.

17. முருக்கினள் - கொன்ருள்.

18. அனந்தரம் - பின்பு. வயிறு வாய்த்துழி - கர்ப்பங் கொண்டபொழுது. வெம் கய கடகரி - கொடிய பெரிய மதம் பொருந்திய யானை. மனப்பங்கயம் - இருதய கமலம்.

19. மதலை - பிள்ளை. கதும் என - விரைவாக. இதம்உற - இன்பம்மிக. பதயுக தாமரை - பாதங்களாகிய இரண்டு தாமரைகள்.

20. மனம் செயாது - எண்ணுமல். ஆல் - அசை.

21. நன்று நன்று என்னும் அடுக்கு கோபம் பற்றிவந்தது. அவனிப - அரசனே.

22. புனலிடை செற்றது - தண்ணீரில் அமிழ்த்திக் கொன்றது. வரவு - வரலாறு. கொல் இரண்டும் அசைகள்.

23. வான்முக மதியம் - ஆகாயத்திலுள்ள இளம்பிறை. புதிய கான்முக இதழி மாலிகை - அன்று அலர்ந்த வாசனையைத் தன்னிடத்துக் கொண்ட கொன்றை மாலை. அரோ - அசை.

24. இருகலை இமையவர் - பெரிய நூலறிவுடைய தேவர்கள். மருங்கு - இடை. மதிக்குமாறுபோல் (இவ்வளவென்று) அளவிடுந் தன்மை போல. அருங்கலை - அருமையான வஸ்திரம். பொரும்கலை எனும் இகல் புரவிவீரன் - பொருகின்ற கலைமானுகிய வலிய வாகனத்தையுடைய வாயுதேவன்.

25. நுவலும் நான்மறை ஆக்கிய முனி - அத்தியயனம் செய்கின்ற நான்கு வேதங்களையும் உண்டாக்கிய பிரமன்-ஆக்கிய என்பது உபசாரம். உருத்து அழன்று-மிகக்கோபித்து. இது ஒரு பொருட் பன்மொழி. உற்பவிக்க - பிறக்க. உரும் என-இடிபோல.

26. தந்தை - பிரமன்.

27. பாரினும் நமக்கு ஒரு பதம் உண்டு - மண்ணிலும் நமக்கு ஒருபதவி உண்டு. ஈரம் உற்று - அன்புகொண்டு. உற்கை போல - விண்மீன்போல. வால் ஒளி - மிக்க ஒளி.

28. என்னை - என்ன. தம்பெற்றி - தங்கள் வரலாற்றை.

29. உற்று உறை - சேர்ந்து வசிக்கின்ற. மெய் உணர்வு அற - மெய் உணர்வு இல்லாமல். தகாதொன்று - தகாத ஒன்று. மற்று எழுவரும் - ஒழிந்த ஏழுபேரும்.

30. தூநகை - வெண்மையான பற்களையுடையவள், அன் மொழித் தொகை. மனை - ஆச்சிரமம். தேனு - காமதேனு. கைக் கொளா - கைக்கொண்டு. மீன்நெறி கரந்து என - மீன்சென்றவழி (பிறர்க்குத் தெரியாமல்) மறைவதுபோல. கரந்து, கரந்தது என் பதன் தொகுத்தல்

31. பயிலும் மாதவம் - செய்கின்ற பெரியதவ இருக்கையி னுல். தவம் - ஆகுபெயர். முசுக்குலம் அனைய மெய் - குரங்கு போன்ற மெய்யையுடைய. தவஞ் செய்வார் உட்கார்ந்திருப்ப தற்கு உவமையாகக் குரங்கு அசைவின்றி உட்கார்ந்திருப்பதைக் கூறுவர். சிசுக்களின் - குழந்தைகளைக் காட்டிலும்.

32. உம்பதம் - உங்கள் பதவியை. உததி - கடல். அவன் செம்பதம் எமது பூ சென்னி ஏந்தினேம் - அவருடைய சிவந்த பாதங்களை எங்களுடைய பொலிவாகிய சிரங்களில் தாங்கினேம்; என்றது, வணங்கி என்றபடி.

33. முனிவு ஆறி - கோபம் தணிந்து. புன்மானுடப் பிறப்பு புரிந்து மீளுதிர் - எளிய மானுடப் பிறப்பை அடைந்து திரும்புங் கள். மின்புரை - மின்னலை ஒத்த. விழைந்த - விரும்பிய.

34. விழைவும் - போகத்தையும். பண்வரும் - பண்ணைத் தோற்றுவிக்கும்.

35. வலத்து உயர்தடபுயம் - வெற்றியால் உயர்ந்த பெரிய தோள்கள். மனை நண்ணும் எல்லையில் - மனைவியாயிருக்கும் பொழுது. என்வயின் - என்வயிற்றில்.

36. அவனிதோயுமுன் - பூமியில் பிறப்பதற்கு முன். எஞ்ச வீட்டிடுவன் - (சாபம்) கழியும்படி கொல்வேன். இவ்விறைவன் தன்னை - இந்தப் பிரபாசன் என்னும் வசுவை. நெஞ்சுஉற - மன திற்கு இயைய.

37. சொல்பால் - சொல்லாகிய பால். படாத - அழியாத. சால் - மிகுந்த. இழிதாயை - இறங்கும் தாயை.

38. சதைய மீன் கடவுள் - சதைய நட்சத்திரத்தை யுடைய வருணன். சசிகுலத்து - சந்திரகுலத்தில். துதை அளி செறிகுழல் தோகை ஆயினாள் - நெருங்கிய வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பெண் ஆனாள்.

39. தவம்உறு அக்குடதிசை தலைவன் - தவம் மிக்க மேற்குத் திக்குக்கு அதிபனாகிய அந்த வருணன். தாரமாம் - மனைவியாகிய.

40. அறம் பயன் என்னும் ஆறு - தருமப்பயன் என்னும் வழியை. எம்மை - எமக்கு, வேற்றுமை மயக்கம். மகப்பேறு செய்து - புதல்வர்களைப் பெற்று.

41. முக்குலம் - அக்னி, சூரியன், சந்திரன் என்னும் மூவர் குலம். குலம் தவம்முனி - மேன்மையான தவத்தையுடைய வசிட்ட முனி.

42. பன்னக நெடுமுடிபார் - ஆதிசேடனுடைய நெடிய முடியில் பொருந்திய பூமி. பொன்னகர் - விண்ணுலகம்.

43. அருந்தி - அநுபவித்து. மாஇரு தரணி - மிகப் பெரிய உலகம். மன்னு - நிலைபெற்ற.

44. மெய்படுகாளைஆம்பதத்து - உடம்பில் தோன்றும் காளைப் பருவத்தைப் பொருந்தும் காலத்தில்.

45. ஒன்றுபட்டு - மனம் ஒருமித்து. தலைநாள் மன்றல் விழைவொடு மணந்த - முற்காலத்தில் செய்த விவாகத்தால் விருப்பொடு சேர்ந்த. எண்ணும் நாள் எல்லை - குறித்த நாள்வரை.

46. மாவேட்டை - மிருகவேட்டை. முற்றி - முடித்து. உறைமறையும் - நீரில் மறைந்த. சானவிதடகரை. கங்கையினது பெரிய கரை.

47. கனகம் பைங் கொடி - பொன்மயமான பசிய கொடி. வான் நிழல் - பெரிய நிழல். நறை - தேன். தடம் - தடாகம். மலைய மாருதம் - தென்றற்காற்று. புண்டரீகம் - தாமரை. புளினமும் - மணற் குன்றையும். புள்இனம் மென்துறை - பறவைக் கூட்டங்களையுடைய மென்மையானகரை.

48. பேதுறும் குறிப்பொடு - துன்புறும் குறிப்போடு. கரிந்த பாதவம் - தீந்தமரம். கால்பொர - இரண்டு காலும் பொருந்த.

குனித்த கார்முகம் - வளைத்த வில். சாயகம் - அம்பு. சிலம்பு என - மலைபோல.

49. வியந்திட - ஆச்சரியப்படும்படி. விடையவன் குமரன் - சிவபெருமானுடைய குமாரராகிய குமரக்கடவுள். வயம்தனில் - தென்றலாகிய தேரில். வாசவன் மதலை - இந்திரகுமாரனாகிய சயந்தன். வின்மையின் - வில்வலியில். பயந்த தன் வடிவின்படியென - பெற்ற தன்னுடைய வடிவத்தின் பிரதிமைபோல.

50. சராசனம் - வில். மறையுடன் - மந்திரத்தோடு. இந்திர தனுவோடு - இந்திர வில்லோடு, வானவில்லோடு. எழிலிஇடை - மேகத்தில். சிந்துவில் - நீரில். மகிதலம் - பூமி.

51. வெம்சிலை விநோதன் - கொடிய வில்வித்தையையே பொழுதுபோக்கும் விளையாட்டாக வுடையவன். ஓதவெண்திரை - பெருக்கையுடைய வெள்ளிய திருப்பாற்கடல். சூடகம் செம்கை - வளையலை அணிந்த செம்மையாகிய கை.

52. மடவரல் - கங்கை. தோன்றல் - சந்தனு.

53. அருந்ததிபதி - வசிட்டமுனி. நூல்வெள்ளம் - நூற்கடல். சிலை - வில். கணை - அம்பு. பயின்றான் - கற்றான்.

54. உகப்புஉற - மகிழ்ச்சி பொருந்த. ஓர் அடிக்கு ஓர் அடி புரிந்து - அடிக்குமேல் அடிவைத்து. மயில் - மயில் போன்ற சாயலையுடைய கங்கை. ஆகுபெயர்.

55. அருக்கன் - சூரியன். தணப்ப - நீங்க. புரம் - நகரத்திலுள்ள மக்கள் - ஆகுபெயர்.

V

அழகரந்தாதி

அழகரந்தாதி, அழகரது அந்தாதி என விரிக்கப்படுதலால், இஃது ஆறாம் வேற்றுமைத் தொகை. அழகர் விஷயமாக அந்தாதித் தொடையால் செய்யப்பட்ட நூல் என்பது இதற்குப் பொருள். அந்தாதி - முதற் பாட்டினிறுதி அடுத்த பாட்டிற்கு ஆதியாக வருவதாம். அழகரென்ற பெயர் பாண்டிய நாட்டிலுள்ள சோலை மலையில் கோயில் கொண்டிருக்கும் திருமாலினது திருநாமமாகும்.

இந்நூலை இயற்றியவர் திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார் ஆவார். இவருக்கு அழகிய மணவாள தாசர் என்ற பெயரும் உண்டு. இவர் வைஷ்ணவ அந்தணர். இவருடைய ஊரைத் திருமங்கை என்று வழங்கும் வெண்மணி என்பர். இவர் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களிலும் சம்பிரதாய கிரந்தங்களிலும் மிக்க பயிற்சி உடையவர். யமகம், திரிபு முதலியன அமையப்பாடுவதில் மிக்க ஆற்றல் படைத்தவர்.

இவர் செய்த நூல்களாவன - திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, ஸ்ரீரங்கநாயகரூசல் என்பன. இந்நூல்களின் தொகுதியை அஷ்டப் பிரபந்தம் என்று வழங்குவார்கள்.

சிலர் இவரைத் திருமலைநாயக்க அரசர் காலத்தவரென்றும் அதனால் இவருடைய காலத்தை இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு என்றுங் கூறுவர். மற்றுஞ் சிலர் இவரைப் பட்டருடைய சிஷ்யரென்றும் அதனால் இவர் 760 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்றுங் கூறுவர்.

இவர் தம்முடைய வாழ்க்கையின் பிற்பகுதியைத் திருவரங்கத்தில் கழித்துவந்தாரென்று இயம்புவர்.

1. நீர் ஆழி - கடல் நீரினது. பால் ஆழி - திருப்பாற்கடல். நின்மலன் - பரிசுத்தமுடையவன். சீர் ஆழி அம் கை - சிறந்த

மோதிரத்தை அணிந்த அழகிய கை. கூர் ஆழி - கூரிய சக்கரா யுதம். மால் அலங்காரனை - பெருமை மிக்க அழகனை. வெய்யோன் - சூரியன். ஓர் ஆழித்தேர் - ஒற்றைச் சக்கரத்தையுடைய தேர். எஞ்ஞான்றும் - எந்தநாளும்.

2. உரைமாற்றம் - சொல்லுகின்ற வார்த்தை. உண்ணும் இரை - (அப்பொறிகள்) அநுபவிக்கின்ற (விஷயங்களாகிய) ஆகா ரத்தை. உரைமாற்று அளவு அற்ற பொன் - உரைத்துப் பார்க் கின்ற மாற்றினது அளவு கடந்த பொன்னுடையை. இலங்கை வரை மாற்றலரை - இலங்கை மலையிலிருந்த பகைவர்களை. செற் றாய் - அழித்தாய்.

3. மாணிக்கம் நகம்புரை மேனி - மாணிக்க மலைபோன்ற வடிவத்தையுடைய. வார்சடையோன் - நீண்ட சடையையுடைய வயிரவமூர்த்தியின். பாணி - கையிலுள்ள. கனம்கம் - பெரிய கபாலத்தில். ஆணிக்கனகம் - ஆணிப்பொன். பேணிக்கு - காப்ப வனுக்கு. அனகனுக்கு - குற்றமற்ற திருமாலுக்கு.

4. பித்து அரும்பா நின்ற - பைத்தியம் உண்டாகின்ற. கைத்து அரும்பாவி எனும் - இகழ்ந்து நீங்குதற்கரிய பாவம் செய்தவன் என்று சொல்லுகின்ற. முத்தரும் பாரும் - முத்தர் களும் பூவுலகத்தவர்களும். துழாய் புது அரும்பு ஆர் - துளசியின் புதிய அரும்புகள் பொருந்திய.

5. புரந்தரன் ஆம் என - இந்திரன் ஆம் என்று சொல்லும் படி. புகர் முகம் மாதுரந்து - புள்ளிகள் பொருந்திய முகத்தை யுடைய யானையை ஏறிச் செலுத்தி. நல்குரவு - வறுமை. நிரந்தர மாய் - எப்பொழுதும்.

6. வம்பே - பயனில்லாமல். துன்று அபிராமனை - பொருந் துகின்ற அழகனை. தோளின் - தோள்வலியால். மல்லை - மல்லர் களை.

7. கூடுகைக்கும் சரமத்து - உடம்பை உயிரானது வெறுக் கின்ற மரண காலத்தில். வஞ்சம் சாடு உகைக்கும் - வஞ்சனை பொருந்திய சகடாசுரனை உதைத்துத் தள்ளிய. கடத்து - மடுவில். வாடுகை குஞ்சரம் - வருந்திய கையை உடைய யானையை. விண் வாழ்க்கைக்கும் - தேவர்களது வாழ்க்கைக்காகவும். வீடுகைக் கும் - அழிவதற்காகவும்.

8. வித்தகர் - ஞானவடிவத்தையுடையவர். உம்பர்க்கு - தேவர்க்கு. விதியும் - பிரமதேவரும். கங்கை மத்தகர் - கங்கையைச் சடையில் வைத்த உருத்திரமூர்த்தியும். கார் ஒத்த - மேகம் போன்ற. இத்தகரும் - இந்த ஆட்டையும். இப்பாட்டு வெறிவிலக்கல் என்னும் துறை.

9. துழாய் பத்திரம் என மாற்றுக. பத்திரம் - இலை. பத்தி - வரிசையாக. மின்செய்யும் - மின்னுகின்ற. கஞ்சம் - தாமரை. மதி முகத்திற்கும், கஞ்சம் கைகால் முதலிய வற்றிற்கும், மின் ஆபரணங்களுக்கும், பச்சை முகில் வடிவத்திற்கும் உவமை ஆகும்.

10. செய்தவர் ஆக - செய்கின்ற தவத்தை உடையவராக. கைதவர் ஆகமம் - வஞ்சகருடைய ஆகமங்கள். மருப்பில் பெய்த வராகனே - தன் தந்தத்தில் ஏந்திய வராகஅவதாரமுடையவனே. எய்தவ - (அம்பு) எய்தவனே.

11. வினைக்கு மருந்து - இருவினைகளையும் போக்குவதற்கு மருந்து. அரிக்கும் பிணி மூப்புக்கும் - சொறியும்படி அரிக்கின்ற நோயையுடைய முதுமைக்கும். வீகின்ற வேதனைக்கும் - இறக்கின்ற வேதனைக்கும். மருந்து அன்ன - யமனைப்போன்ற. மிருத்யு என்னும் வடசொல் மருத்து எனத் திரிந்து எதுகை நோக்கி மருந்து என நின்றது. மருந்து - அமிர்தம் என்று கொள்ளினும் ஆம். தாமரை அங்கனைக்கும் - செந்தாமரையிலிருக்கின்ற திருமகளுக்கும். அருந்து அமுதே - உண்ணுகின்ற அமுதம் போன்றவனே. அருந்ததி - அருந்ததிபோன்றவள்.

12. கலையா - கலந்து. மயானம் கலக்கு முன்னே - சுடுகாட்டை அடைவதற்கு முன்னே. மயானம் மையானம் எனப் போலியாயிற்று. தலை ஆம் ஐ ஆனனன் - தலைகளையுடைய ஐம்முகனாகிய உருத்திரமூர்த்தி. தாமரையான் - பிரமன். அலை ஆமை ஆனவன் - சமுத்திரத்தில் ஆமை வடிவெடுத்தவன்.

13. உயிர் உருக்கும் - உயிரை உருகப்பண்ணும். தொல்லை - பழைய. வினையின் வஞ்சம் முருக்கும் - வினையாகிய வஞ்சனைகளை யழிக்கும். பவம் முருக்கும் - பிறவியைப் போக்கும். முருக்கு

மலர்வாய் - செம்முருக்கம் பூவைப்போன்ற வாயை யுடைய. கஞ்சம்திரு - செந்தாமரையி லிருக்கின்ற இலக்குமி தேவிக்கு. கஞ்சனுக்கு நஞ்சம் - கம்சனுக்கு விஷம் போன்றவர். உரு கு வளை ஆழி அன்னவர் - வடிவம் பூமியைச் சூழ்ந்த கடல் போன்றவர்.

14. தனையும் - அளவும். அவரைத் தாம் அங்கு அளாவி - அவரைத் தாங்கள் அங்கு அடைந்து. மனத்துள் வைப்பார் - மனதில் தியானிப்பவர். தண்டலையின் - சோலையிலுள்ள. அகில் தூமங்கள் - அகிற் கட்டைகளின் புகைகளும். ஆவி - தடாகங்களும். சேமம் களாவின் கனி அனையார் - இன்பத்தைத் தருகின்ற களாப்பழத்தைப் போன்ற நிறத்தை யுடையவர்.

15. சேராது அகாதம் நரகு - ஆழமாயுள்ள நரகம் அடையமாட்டாது. தகாத வசைபிணி பாவம்வாரா எனக்கொள்க. தூராத காதங்கள் - தூர்க்கமுடியாத பல காததூரமுள்ள இடத்தை. தூர்த்தானை - தூர்த்து அணைகட்டியவனை. ஆராத காதலுடன் - அமையாத அன்போடு.

16. அழ கன்றிய - ஓயாமல் அழுதலால்கன்றிப்போன. கண்ணிக்கு - கண்களையுடையவளுக்கு. கண்ணி - மாலை. வழக்கு அன்றி - நியாயமில்லாமல். வால்வளை - வெண்மையான வளையல்கள். குழ கன்று - இளமையாகிய கன்றுகள். குழல் - புல்லாங்குழல். சழக்கு அன்றில் - குற்றம் பொருந்திய அன்றில் பறவை.

17. சாறு கரும்பனை - இரசமுள்ள கரும்புவில்லை யுடைய மன்மதனை. கூற்று எனும் - யமன் என்று சொல்லுகின்றாள். ஆசைத்தமிழ் - யாவர்க்கும் ஆசையைத் தருகின்ற தமிழுக்கு. மலையம் காற்று - பொதிய மலையிலிருந்துவரும் தென்றற்காற்று. உக்கு அரும்பல் - சிதறி வீசுதலுக்கு. நையும் - வருந்துகின்றாள். அலங்காரற்கு - அழகர்க்கு. அண்டர் ஏற்றுக்கு - தேவர்க்கு எல்லாம் ஆண் சிங்கம் போன்றவனுக்கு. மாற்று - பரிகாரம். கரும்பனை அல்லாது - கரியபனை மடல் ஊர்தலின்றி.

18. மருந்து உவந்தார் - அமிர்தத்தை விரும்பியுண்ட தேவர்கள். தாரணி அருந்துவம் என்று அயின்றார் - உலகத்தையாம் உண்ணுவோம் என்று உண்டவர். அடல் ஆயிரம் வாய்பொருந்து - வலிமையுள்ள ஆயிரம் வாய்கள் பொருந்திய. வந்து ஆர்பணிப்

பாயார் - காற்றை உண்ணுகின்ற ஆதிசேடனாகிய சயனத்தை யுடையவர். வெறுமை - வறுமை.

19. வெறுத்தவரை - பகைவர்களையும். வெங்கண் கறுத்த வரைக்கு - கொடிய கண்களையுடைய கரிய மலைபோன்ற யானைக்கு. கனகாம்பரத்தைப் பொறுத்த - பீதாம்பரத்தை உடுத்த. அரைக்கு அஞ்சன மேனிக்கு - இடையைக் குறித்தும் கரியதிருமேனியைக் குறித்தும். ஆவிபுலர்ந்து - உயிர்சோர்ந்து. சிறுத்தவரை கஞ்சம். சிறிய ரேகைகளையுடைய கைத்தாமரைகளை.

20. அந்தரத்து அனைவோர்களும் - தேவலோகத்திலுள்ள எல்லாத் தேவர்களும். இருக்குஓதி - வேதங்களைச் சொல்லி. நெருக்கம்தர - நெருக்கம் உண்டாக. நிறத்த - நல்ல நிறத்தை யுடைய. துப்பின் உரு - பவழம் போன்ற வடிவத்தையுடைய. கந்தர் அத்தனை - குமரக்கடவுளின் பிதாவாகிய உருத்திர மூர்த் திக்கு, அத்தனை, வேற்றுமை மயக்கம். திருகந்தரத்தனை - சிறந்த கழுத்தையுடைய திருமாலை.

VI

நீதி நெறி விளக்கம்

இது நீதியாகிய நெறிக்கு விளக்கம் போல்வது என்று பொருள்படும். நெறி - வழி, மார்க்கம்; விளக்கம் - தீபம். இதனை இயற்றிய ஆசிரியர் குமரகுருபர சுவாமிகளாவார். நீதி நெறி விளக்கத்தில் கல்வி, அரசு, அமைச்சு, முயற்சி முதலியவற்றை விளக்கி முடிவில் துறந்தார் நிலையும், முத்திக்கு வழியும் கூறப் பெற்றுள்ளன. ஒவ்வொரு வெண்பாவிலும் உரைக்கப்படும் பொருள் மிக்க திட்பமும், நுட்பமும் உடையது.

குமர குருபர சுவாமிகள் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரில் வேளாள வருணத்தில் பிறந்தவ ராவார். இவருடைய தந்தையாரின் பெயர் சண்முக சிகாமணிக் கவிராயரென்பதாகும்; தாயாரின் பெயர் சிவகாம சுந்தரி அம் மையாரென்பதாகும். இவர் ஐந்து வயதுவரை ஊமையாகவே இருந்தாரென்றும், பின்னர் திருச்செந்தூர் முருகப்பிரான் திரு வருளால் பேசுந் திறன்பெற்றனர் என்றுங் கூறுவர். அப்பொ ழுது பாடிய நூலைக் கந்தர் கலிவெண்பா என்பர். இவர் இள மையிலேயே புலமை நிரம்பித் துறவு பூண்டு தருமபுரவாதீனத்தை அடைந்து அதில் நான்காம் குருமூர்த்தியாயிருந்த ஸ்ரீ மாசிலா மணித் தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்று அவர்மீது பண்டார மும்மணிக்கோவை பாடி, அவர் ஆணையின்படி காசியம்பதி யடைந்து தங்கியிருந்தனர். இவர் காசியில் அமைத்த மடத்திற் குக் 'குமாரசுவாமி மடம்' என்று பெயர்.

பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைப் பாடுவதில் இவர் மிக வல்லுநராக விளங்கினர். இவருடைய பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை நிரம்பப்பெற்றவைகளாகிப் படிப்போர்க்கு மிக்க இன்பத்தைப் பயக்கும்.

மதுரையில் அரசராக விளங்கிய திருமலை நாயக்கர் வேண்டு கோட்படி நீதிநெறி விளக்கத்தைப் பாடினர் என்றும், அம்மன் னர் இவர்க்கு நிரம்பிய பொருளை வழங்கினர் என்றும் கூறுவர். இவரது காலம் 300 ஆண்டுகளுக்கு முன்னது ஆகும். இவர் இயற்றிய நூல்கள் கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான் மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், பண்டாரமும் மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமியம்மை இரட்டைமணிமாலை, காசிக்கலம்பகம், சகலகலா வல்லிமாலை முதலியன.

1. திரை - அலை. யாக்கை - உடம்பு. நமரங்காள் - நம்மவர் களே. மன்று - சபை, அம்பலம்; இவ்விடத்துத் திருச்சிற் றம்பலத்தை யுணர்த்தும்.

2. ஈர்ங்கவி - இனிய செய்யுள். மல்லல் வெறுக்கையா - வளப்பத்தையுடைய பொருளாக. மாண் அவை - பெருமையுடைய சபை. மண்ணுறுத்தும் - அழகை யுண்டாக்கும். 'செல்வமும்' உம்மை சிறப்பு.

3. தன்னை வியப்பிப்பான் - தன்னைப் பிறர் நன்கு மதித்துக் கொண்டாடும்படி முயலுபவன். 'வியப்பிப்பான்,' - பான் ஈற்று வினையெச்சம்; வியக்கும்படி செய்பவன் எனலும் பொருந்தும். தீ சுடர் - தீயின் சுவாலை, விளக்கு.

4. பெருஞ்சுட்டு - உயர்வாக மதிக்கப்படுதலை. யாண்டும்- எப்பொழுதும். நோற்பது - நியமமாக ஏற்றுக்கொள்ளத்தக்க செயல். சீர் - சிறந்த குணங்களை யெல்லாம். தூற்றி - பலர் அறியச் சொல்லி. சிறுமை - குற்றங்கள். புறங்காத்து - வெளிப்பட வொட்டாது அடக்கி. தாழ்ச்சி - பணிந்தமொழி - அடக்கமான வார்த்தை. சுட்டு - முதனிலைத் தொழிற்பெயர்.

5. வேந்து + அவை - வேத்தவை, அரசசபை. மிகல் மக்கள் - உயர்ந்தோர். மிகைமக்கள் என்றிருப்பது பொருத்தம். காத்தது - காத்ததனுற் கிடைக்கும் பொருள், வினையாலணையும் பெயர். மாத்தகைய - பெருஞ்சிறப்புடைய. பூஞை - பூனை. புறங் கடைய - வெளியிலுள்ள. கந்து - யானைகட்டுந்தறி. பூட்கை - வலிமை.

6. கண்ணிற்சொலி - கண்ணின் குறிப்பினுல் கருத்தை வெளி யிட்டு; சொலி - இடைக்குறை. செவியின் நோக்கும் - காதினுற் காணவல்ல; (இருந்த இடத்திலிருந்தே ஒற்றர் தூதர் முதலியோ ரால் நேரிற் பார்த்தாற்போல) காதினுல் கேட்டறியும். மன்பதை - உயிர்கள். வயப்படை - வலிய ஆயுதம். ஆண் அல்லவர் - ஆண் தன்மையில்லாத பேடிகள்.

7. குடிகொன்று - குடிகளைவருத்தி, இறை - அரசர்க்குரிய பகுதிப்பொருள். கன்று + ஆ = கற்று - கன்றையுடைய பசு. மென்றொடர் வன்றொடராயிற்று. கோமகற்கு - அரசன் செய லுக்கு. ஓம்பி - காத்து. கொள்ளும் ஆறு - பெறும்விதமாக. வெள்ளம் - ஒருபேரெண்.

8. ஏதிலார் - பிறர். கோது - குற்றம். ஓரீஇ - நீக்கி; சொல்லிசையளபெடை. முதுக்குறைவு - பேரறிவு. வெளிது - வெண்மை நிறமுடையது, குறிப்பு வினைமுற்று. சால்புடைத்து - தகுதியுடையது.

9. கவளம் - வாயளவுகொண்ட சோற்றுத்திரள். தூங்கும் களிறு - அசையும் இயல்புடைய ஆண் யானை. அது - அக்கவளம். உய்யும் - பிழைக்கும். ஆரும் கிளை - நிறைந்த சுற்றம். அயின்று - தின்று.

இப்பாட்டு, செல்வர்க்குத் தம் பொருளில் ஒருசிறுபகுதி செலவு செய்தலால் கேடின்று எனவும், அச்சிறு பகுதியால் பலர் பிழைத்துப் பயன் பெறுவர் எனவும் பொருள்தருதலால், பிறிது மொழிதல் என்னும் அலங்காரம்.

10. விழலர் - (பிறப்பின்) பயனைக் கொள்ளாதவர். அழூகி - அழுகுதலால். யோசனை - நெடுந்தூரம். கழிமுடை நாற்றம் - மிக்க முடை நாற்றம். விளிவு உன்னி - மரணத்தைக் கருதி. வெய்து உயிர்ப்பர் - பெருமூச்சுவிடுவர். மெய் பயன் கொண்டார் - உடம்பாலாகிய பயனைக்கொண்டவர். சுமை - உடம்பாலாகிய சுமையை. சுளியார் - வருந்தார்.

11. இடித்து - வற்புறுத்தி. வாய்வெரீஇ - சொல்லுதற்கு அஞ்சி. பாகுகைம்மா வயத்ததே - பாகன் யானையின் வசப் பட்டவனே; ஏகாரவினு எதிர்மறை. அமைச்சு - மந்திரி. பாகு அமைச்சு என்பன சொல்லால் அஃறிணையாகலின் அஃறிணை முடிபு ஏற்றன.

12. முயற்றின்மை - முயற்சியின்மை. உயல் ஆகா - முடிவு பெறாத காரியங்களை. ஊழ்திறத்த என்னார் - ஊழின் பகுதியை யுடையன என்று சொல்லார். அஃதாவது ஊழாலே அச்செயல் முடியவில்லை யென்று சொல்லார். ஊற்றம்இல் தூவிளக்கு - காற்றை மறைக்கும் ஆதரவு இல்லாத தூயவிளக்கை. நிலைத்தலில் லாத விளக்கை யெனவும் ஆம். எறிகால் முகத்து - வீசும் காற்றுக் கெதிரே. ஊழ்த்திறத்த உயலாகா எனக்கூட்டி ஊழ்வலி தப்புவன அல்ல என்று உரைப்பினும் பொருந்தும்.

13. உலையா - சலியாத. களைகண் - பற்றுக்கோடு. பால்முளை - ஊழின்முளை. மறலி - யமன். கான்முளை - பிள்ளை; இங்கு மார்க்கண்டேயனைக் குறித்தது. கரி - சான்று. போலும் - அசை. 'மறலி உயிர்குடித்த கான்முளை' என்றது, மறலி அழிவுக்குத் தான் காரணம் ஆதல்பற்றி; இஃது உபசார வழக்கு.

14. செய் வினையின்மூலம் - செய்யும் காரியத்தின் காரணம். விளைவு - அதனால் வரும்பயன். துணைமைவலி - துணையாயுள்ளவரது வலிமையின் அளவு. சூழ்வன - இடையூற்றை விலக்கும் உபாயங்களை. சூழ்ந்து - ஆராய்ந்து. ஒருதொழில் செய்யப்புகுவார் காலம், இடம், காரணம், பயன், இடையூறு, விலக்குமுறை, துணைவலி ஆகிய ஏழினையும் ஆராய்ந்து செய்க என்பது இதிற் கூறப்பட்டது. ஆள்வினை - காரியம்.

15. கனியும்மொழி - கனிந்து உரைக்கும் சொல். கடு - நஞ்சு. அனல் கொளுந்தும் - தீப்போற் சுடுகின்ற. வெங்காரம் - ஒருவகை உப்பு. மெய்பொடித்தல் - உடல்மயிர் சிலிர்த்தல். சிங்கி - விஷம்.

16. குலம் - குல ஒழுக்கம். வெறுக்கையும் - செல்வமும். வாய்மைநலம் - உண்மை கூறுதலாகிய நன்மையை. திருவும் - செல்வமும். ஊன் ஓம்பும் வாழ்வும் - உடம்பைப் பாதுகாக்கும் வாழ்க்கையும். உரிமை - சுதந்திரமான நன்மதிப்பு. ஓம்பிக்காத்தல் தலை - (இவைகள் தன்னிடம் உண்டாகாமல் தன்னை) நன்கு காத்தல் சிறந்ததாம். ஊன் உடம்புக்குக் கருவியாகுபெயர். உண்பதூஉம் இன்னிசை யளபெடை.

17. நிலைக்கும் - நிலைமைக்கும். குடிமைக்கும் - குடிப்பிறப்புக்கும். தாள் - முயற்சி. எய்த்தும் - தளர்ந்தும். அறங்கடை - பாவம். புறங்கடை - வீட்டுவாயில். வெஃகார் - விரும்பார். இவர்க்குச் செல்வம்தானே வீட்டுக்கு வரும் என்பதாம்.

18. இன்சொலினும் நல்கூர்தல் - இனிய சொல்லினும் வறுமையடைதல். ஓகோ - வியப்பும் இரக்கமும் பற்றிய குறிப்பிடைச்சொல். ஓ - ஓ என்பது ஓகோ என எதுகைபற்றித்திரிந்தது. தீவினைகம்மியனால் - தீவினையாகிய கம்மாளனால். நாகொன்று வாய்ப்பூட்டிடப்படின் என இயைக்க. ஆ - ஆ இரக்கக் குறிப்பு. தன்னிடத்திலுள்ள எளிய இன் சொல்லும் வழங்காது நல்கூர்தல்

அவரது தீவினைப்பயனே என இரங்கிக் கூறியவாறு. கொடிது கொடிது, அடுக்கு மிகுதிபற்றியது.

19. சொல்வன்மை. யாவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க சொல்லாற்றல். கொன்னே - வீணாக; பிறர்க்கும் பயன்படாமல். கோறலின் வேறல்ல - கொல்லுதலினின்றும் வேறான செயலல்ல. கொல் + தல் = கோறல், விகுதியொடு புணருமிடத்துப் பகுதி விகாரப்பட்டது. வல்லை - விரைந்து. வாக்கின்பயன் - சொற்செல வால்வரும்பயனை. கொள்பவர் அஞ்சுபவோ என முடிக்க. அஞ்சார் என்பது கருத்து.

20. உறுபயன் - பெரும்பயன். தாழ்வரோ - தாமதிப்பார்களோ. அறனல்ல - பாவச்செயல். எண்மையவாயினும் - செய்தற்கு எளியவேயாயினும். ஒண்மை - ஒள்ளிய அறம்.

VII

நால்வர் நான்மணி மாலை

இது சைவ சமயாசாரியர்களாகிய நால்வர்களைப்பற்றிப் பாடப் பெற்ற ஒரு நூலாகும். நான்குவகை மணிகளால் கோக்கப்பட்ட ஒரு மாலைபோல் நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், நேரிசை யாசிரியப்பா என்று சொல்லப்படும் நான்குவகையான பாக்களால் இந்நூல் செய்யப்பட்டதாதலின் நான்மணிமாலை யென்று பெயராயிற்று.

வெண்பாவால் திருஞான சம்பந்தரையும், கட்டளைக் கலித்துறையால் திருநாவுக்கரசரையும், விருத்தத்தால் சுந்தரமூர்த்தியையும், ஆசிரியப்பாவால் மாணிக்கவாசகரையும் இந்நூலுள் ஆசிரியர் துதித்துள்ளார்.

இந்நூலை இயற்றியவர் நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவார். இவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்த குமாரசாமிதேசிகர் என்பவரின் முதற்புதல்வர். இவருடைய ஏனைய சகோதரர்கள் வேலையர், கருணைப் பிரகாசர் என்பவர்கள். இவர் மணஞ்செய்துகொள்ளாது துறவு நெறியில் நின்றனர். இவரது சமயக்கோட்பாடு வீரசைவம் ஆகும். சிலகாலம் துறைமங்கலத்தில் வதிந்துவந்தமையால் இவரைத்துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பர். நல்லாற்றூரில் இவர் பரிபூரண தசையடைந்தமையின் இவரை நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் என்றுங் கூறுவர். நன்குகப்பாடும் ஆற்றல் படைத்தவர். இவர் பாடிய நூல்கள் பிரபுலிங்கலீலை, சோண சைலமாலை, வெங்கைக் கோவை, வெங்கைக் கலம்பகம், வெங்கை உலா, நால்வர் நான்மணி மாலை, சிவஞான பாலையதேசிகர் நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலியனவாகும். இவர் இருநூற்றைம்பது வருடங்கட்குமுன்பு இருந்தனர்.

1. பொய்கை - சீர்காழியிலுள்ள பிரமதீர்த்தம். இயற்பாவான் மொழிதல் - இயற்பாவால் துதிக்கப்படுதல். உண்டு மறித்து அமுதாக இயற்பாவால் வார்த்தபிரான் என்னனுமாம். வீடு - புகலிடம்.

2. வாயில் - ஏது. தொடை - மாலை. சொல்வேந்த - நாவுக்கரச. பொது ஆட்டிற்கு வல்லன் - பொதுவிலே (சபையிலே) நடனம் புரிதலில் வல்ல பெருமான். பாட்டில் எவ்விதத்தாலும் நீயும் அவனும் ஒப்பீராகலின் இங்ஙனம் ஈந்தமையாற் பயன் என் என்பது.

3. படி - ஒப்பு. வான் - வானுலகத்தவர். பரமன் விருப்பன் என்பது விளங்குமாறு அறிந்தனனென்க. தொடி - வளையல். மிடி - வறுமை.

4. விளங்கு இழை - திகழும் ஆபரணங்களை யணிந்த உமாதேவியார். ஆரணம் - வேதம். ஆதி - கடவுள். வாசகத்தேன் - திருவாசகமென்னும் தேன். தொடுமணல்கேணி - தோண்டிய மணல்கேணி. விதிர்விதிர்ப்பு எய்தி - நடுக்கம் அடைந்து. மன்பதை உலகில் - மக்கள் பரப்பையுடைய இம்மாநிலத்தில்.

5. வெள் ஏறு உடையான் - வெள்ளிய இடப வாகனத்தை யுடைய சிவபெருமான். திருத்தாண்டக வேந்தர். திருத்தாண்டகங்களையருளிய தலைவர், (திருநாவுக்கரசர்). அப்பூதி - அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடத்தில் மிக்க அன்புடையவர். நம்பியாரூரர் - சுந்தரமூர்த்திகள்.

6. அளகைப்பதியான் - குபேரன். உறழ்ந்த - ஒத்த. பரவை துணைவா - பரவையார்க்குக் கணவரே. நுதல்கண் பெருமான் - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்.

7. பெருந்துறை - திருப்பெருந்துறை யென்னும்பதி. புனிதன் - தூயோன் (மாணிக்கவாசகர்). வாச்சியம் - உரை.

8. ஒரு பிள்ளை - திருஞான சம்பந்தர். வீழி - திருவீழி மிழலை. வள்ளை குழை உமை - வள்ளை இலைபோலும் காதுகளையுடைய பார்வதி.

9. வாங்குசிலை - வளைந்தவில். மூலமலம் - ஆணவமலம். வெங்கரவு - வெவ்விய முதலை. பகுவாய் - விரிந்தவாய். பனவக்குலமகன் - அந்தணகுலப்புதல்வன். திரோதாயி - திரோதான சக்தி. நாதாந்தம் - நாதத்தின் முடிவு. குண்டையூர் - ஓர் தேவாரம்பெற்றபதி.

10. பரிதி - சக்கரப்படை. சுருதி - வேதம். கடிமலர் கோதை - மணம் நிரம்பிய மலர்மாலை. உடை ஒலிக்கும் சிலை - ஆடையைத் துவைக்கும் கற்பாறை. முள்தாள் தாமரை - முள் செறிந்த தண்டையுடைய தாமரை. மாற்றடி - மாறு அடி, பிரம்படி.

11. நெகிழ்ச்சி மலர் சந்தையினும் வண்டு இரையும் - விரிதலுடைய மலர்களில் சந்தையினும் வண்டுகள் மிகமுழங்கும். பால் கொடுத்ததாய் - ஞானப்பாலை அளித்த உமாதேவியார்.

12. அறிவு ஆகிய நாமம் முன்கொண்டு இருந்த வாயிலின் - அறிவென்னும் பெயரை அநாதியே கொண்டுள்ள வாயிலில். ஆணவம் ஆகும் கபாடம் மன்திறந்து - ஆணவ மலமென்னுங் கதவையும் மிகத்திறந்து.

13. நாற்பகவு - நால்பகவு - நாலின் பிளப்பு. புலவி - ஊடல். கோக்கலிக்காமன் - ஏயர்குடித் தலைவராகிய கலிக்காம நாயனர். கான்றிட - கக்கும்படி.

14. மழு - மழுவென்னும்படை. முகந்து - மொண்டு. மெய்ப் பயன் - உண்மைப்பயன்.

15. பயன் - பழம். விடம் - விஷம், நஞ்சு. சிரபுரத்து நாவலன் - சீர்காழியில் தோன்றிய நாவில் வல்லவனுகிய திருஞான சம்பந்தர்.

16. பிறைசூடி - பிறைச்சந்திரனைச் சூடிய சிவபெருமான். உவப்பு உறுக்க - களிப்பை உறுவிக்க.

17. போதம் - ஞானப்பால். உய்த்ததோ - செலுத்தியதோ. நம்பி - சுந்தரமூர்த்தி.

18. அலந்தேன் - ஆவல் மிகுந்தேன். கோடல் - கொள்ளு தல். பரிமா - குதிரை. குருந்து உறுநீழல் - குருந்த மரத்தின் விரிந்த நீழல்

VIII

விநாயகர் பிள்ளைத்தமிழ்

இது விநாயகக் கடவுளின் பிள்ளைப் பருவத்தைப்பற்றிப் பாடிய தமிழ்நூல் எனப் பொருள்படும். விநாயகர் - சிவபெருமா னுடைய மூத்த பிள்ளையார். அடியார் இடையூறுகளைப் போக்கு தற்கு இவரைச் சிவபெருமான் அருளினன் என்பர். 'வழிபடு மடியவர் தமதிடர், கடிகணபதிவர வருளினன் - வலிவல விறையே, என்பது தேவாரம். பிள்ளைத் தமிழ் பிள்ளைப்பாட்டு எனவும் வழங் கப்படும். இது தேவரையும் மக்களையும் பிள்ளைப்பருவத்துச் சில நிகழ்ச்சிகளைப் பகுத்துக்கொண்டு பாடும் பிரபந்தமாகும். இஃது ஆண் பெண் இருபாலிலும் வரும். ஆண்பாலாயின், காப்பொடு செங்கீரை தால் சப்பாணி, யாப்புறு முத்தம் வருக வென்றுரைத் தல், அம்புலி சிற்றில் சிறு பறை சிறுதேர் எனப் பத்தும், பெண்பா லாயின் சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஒழித்து அம்மானை, நீராடல், ஊசல் என்பவற்றைக் கூட்டிப் பத்தும் கூறுவர். விநாயகக்கடவுள் ஆண்பாலாதலால் முன்னர்க்கூறிய பத்துமே இப்பிள்ளைத் தமிழில் வந்தன. இவ்விநாயக மூர்த்தியைத் தொண்டைநாட்டுத் தொட்டிக்

கலை என்னும் ஊரிலுள்ள செங்கழுநீர் விநாயகர் என்னும் திருப் பெயரால் வழங்குவர்.

இந்நூலாசிரியர் திராவிட பாஷ்ய கர்த்தர் என்று சிறப்பிக் கப்பெற்ற சிவஞான முனிவர். இவர் பாண்டிநாட்டுப் பாபவிநாசத் தலத்தை அடுத்த விக்கிரம சிங்கபுரத்தில் வேளாளர் குலத்தில் ஆனந்தக் கூத்தருக்கு மயிலம்மையார் திருவயிற்றில் உதித்தவர். இளமையிலேயே துறவியாய்த் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் வேலப்ப தேசிகர் திருவடிகளையடைந்து வடமொழி தென்மொழி இரண்டிலும் சிறந்த பேரறிவாளராய்த் தமிழிலக்கிய இலக்கண வகையிலும், சைவசித்தாந்த சாத்திரவகையிலும் எத்தனையோ பல அரிய நூல்களைச் செய்தளித்தவர் ஆவர். இவர் உரைசெய்தல் போலச் செய்யுள் செய்தலிலும் தலைசிறந்தவர். இவர் உரைநூல் களில் தொல்காப்பியச் சூத்திர விருத்தியும், சிவஞான சித்தியார் சுபக்க உரையும், சிவஞானபோதச் சிற்றுரையும், சிவஞானபோத பாடியமும், உலகம் மிகவும் மதித்துப் பாராட்டுவனவாகும். காஞ்சிப்புராணத்தில் இவர் பாடிய முற்பகுதியும், இவர் பாடிய பிரபந்தத்திரட்டும், இவரது செய்யுள் திறத்தைச் செம்மையாகத் தெரிவிப்பனவாம். இவர் செய்யுள் நூலுள் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் என்பது இங்குப்பாடமாக வைக்கப்பட்ட தாகும்.

இவர் இற்றைக்கு 150 வருடங்கட்கு முந்தி விளங்கியவர்.

குடவாயில், குடந்தை எனத்திரித்து வழங்கப்பட்டதுபோலத் தொட்டிக்கலை, கலைசையெனத் திரித்து முன்னோரால் வழங்கப் பட்டது.

காப்புப்பருவம்:—தெய்வங்கள் காத்தற்குக் கூறும் பருவம், பருவம் உடம்பின் பல நிலைக்கும், நூலின் உட்பிரிவுக்கும் வழங்கப் படும் பெயர்.

1. காளத்தை - நஞ்சினை. திரைக்கையால் - அலையாகிய கையினால். பாற்கடல், நஞ்சினை நீட்டிய பிழையினைப் பாராது திரு மகளோடு அமுதமும், கவுத்துவ மணியும் தனக்கு உதவிடும் நன்றி பாராட்டி அதில் பள்ளிகொண்டு பெயர் நிறுவும் அண்ணல் என்க. தீமையும் நன்மையும் ஒருவராற் செய்யப்பட்டிருப்பின் தீமையை மறந்து, நன்மையைப் பாராட்டுபவன் புருடரின்

உத்தமன் என்னும் கருத்தால் இது கூறினர். புருடோத்தமன் திருமால் பெயர்களுள் ஒன்று. தரம் - மேல். அதனின்மேல் தமம். எல்லாவற்றினும் மேல் உத்தமம். விநாயகர் யானை முகத்தவராதல் பற்றி இவரைச் சாமானிய யானையாக நினையாமைக்குக் கூறுகின்ருர். தளைப்பவரும் - கட்டுபவரும். ஊருநரும் - ஏறிச்செலுத்துவோரும். பாசம் - கயிறு. அங்குசம் - யானைத்தோட்டி. மததாரை - மத ஒழுக்கு. எண்திசைத் தறுகட்களிறு - எட்டுத்திக்கிலும் உள்ள வீரமுடைய யானைகள். இவைகள் உடல் நடுங்கச் செவியாற் காற்றை யெழச்செய்து. பதியும் - இருக்கும். களிறுதனை அண்ணல் காக்க என்ருர் - யானையைக்காத்தல் அவனுக்கு உண்டு என்னும் குறிப்பால். விசேடணங்களால் ஆபத்தில்லாத இந்த யானையைக் காத்தல் அவனுக்கு எளிது என்று குறித்தாராவர். மோதகம், கொம்பு, கலசம், அங்குசம், பாசம் இவை தாங்கிய ஐங்கரமுடையவர் விநாயகர்.

செங்கீரைப்பருவம்:— செங்கீரையாடுதலைக் கூறும் பருவம். செங்கீரை - செங்கிளி; கீரை - கிளி; கீர - வடமொழி. செங்கிளி ஒருகால் பதித்து ஒருகால் தூக்கி இருபுறத்தும் தலையசைத்துச் சாய்ந்தாடுதல் இயல்பு. இதைப்போலத் தவழ்நிலையில் ஒரு முழந்தாள் பதித்து ஒரு முழந்தாள் தூக்கி இருதோளினும் தலையொற்றும்படி பலமுறை சாய்ந்து அசைத்தாடுதலால் இப்பெயர் கொண்டது.

2. தோளணி - தோள்வளை. தொங்கல் - மாலை. கையினீர் - துதிக்கையின் வழிகின்ற நீர். கார்வென்று - மழையை வென்று. குஞ்சி - தலைமயிர். தார் - மாலை. தவாதபதம் - கெடாதபதவி. நேரலர் - பகைஞர், தொழாதவர் என்றவாறு. தந்தி - தந்தத்தையுடைய யானை.

தாலப்பருவம்:— தாலாட்டுவதைச் சொல்லும் பருவம். வடமொழியில் தாலு - நாவின்பெயர். அதனை ஆட்டி ஒலிப்பித்தலால் தாலாட்டுதல் என்பர். தமிழில் தால் என வழங்கும். இஃது ஆல், ஆலம் என்ருற்போலத் தாலம் எனவும் வழங்கும்.

3. வாசம் - மணம். அம்புயம் - தாமரை. தாமரை பகலில் மலரும்பூ. குமுதம் - செவ்வாம்பல். இஃது இரவில் மலரும்பூ. வரைப்பு - பூமி. இரவோர் - யாசகர். கீர்த்திமகள் - புகழ் மகள். எவ்வாறும் - யாசகர் விரும்பிய எவ்விதமும். பெருங்கொடையோர்

கதியதடம் - பெருங்கொடையாளருடைய நெறியையுடைய குளங்கள். குளங்கள் வாசம் பரப்பி அழைத்துப் பகலும் இரவும் வண்டினங்களை யூட்டும். கொடையோர் புகழைப்பரப்பி அழைத்து இரவோரைப் பகலும் இரவும் எப்போதும் ஊட்டுவர் என்று கொள்ளுக.

சப்பாணிப்பருவம்:— கையொடு கைசேர்த்துக் கொட்டுவதைச் சொல்லும் பருவம். ச - உபசர்க்கம் - சேர்க்கப்பட்ட. பாணி - கை.

4. மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்கள். உயிர்க்கரி என்று உயிர்களை யானையாக உருவகப்படுத்தலால் அதற்கேற்ப மும்மலமே மும்மதம் என்றார். போத முழுத்தறி - ஞானமாகிய குறைவில்லாத தூண். முகிழ்த்து அலர் அன்பின் சங்கிலி - அரும்பி மலர்கின்ற அன்பாய சங்கிலி. இன் - சாரியை. முதிர்ந்தவர் - அறிவு முதிர்ந்தவர். உள்கூடம் - மனமாகிய கூடம். இம்மென - இம்மென்னும் அளவில். விரைதலுக்குக் கூறுவது, 'இம்மென்னும் முன்னே' எனவரும். புவனமெனும் கடுவனம் - உலகு என்னுங் கடுங்காட்டில். பாகர் - ஏறி நடத்துவார். எப்பாகர்க்கும் - ஆள்வார் எவர்க்கும். விநாயகர் தம் கரங்களில் அங்குசமும், பாசமும் வைத்திருத்தலுக்குப் பொருள் கூறியது காண்க. சார்பவை என்றது உயிர்க்கரிகளை. கொம்மை மலர்க்கைகள் - தட்டுதலையுடைய மலர்போன்ற கரங்கள். தட்டிக் கொட்டுதலால், கொம்மை கொட்டுதல் என வழங்கும். ஏய்ப்ப - ஒப்ப. குலை - கரை.

முத்தப்பருவம்:— முத்தமிடுதலைக் கூறும் பருவம்.

5. படி அளிக்குலம் - படிகின்ற வண்டின் கூட்டங்கள். அளிகுலம் என வேண்டுவது அளிக்குலம் எனத் தமிழ் இலக்கணப்படி வல்லொற்று தோன்றியது. மதசலம் கருமையுடையதால் இவ்வாறு கூறினார். கவுள் - கன்னம். உவட்டும் - வெள்ளம் எடுக்கும். கடம் - மதசலம். கூர்ங்கோடு - கூர்மையுடைய கொம்பு. உன் கரியமதமும் முகக்கொம்பும் முத்தமிடும்போது எங்கள் முகத்தில் கறையையும் புண்ணையும் செய்தாலும் செய்க. எங்கள் கண் மையும் மூக்குத்தியும் உன் முகத்தில் கறையும் புண்ணும் செய்யாத அன்பு வாய்க்க முத்தம் அருள் என்க. எங்கட்கு

விக்கினம் வந்தாலும் வருக. உனக்கு விக்கினம் வாராதபடி முத்தம் அருளுக என்று விக்னேச்சுரரை வேண்டினர் என்க. பிறவிக்கடற்கு ஓர் கரையாகப் பூத்த மந்திரத்தையுடைய பழமறை.

வருகைப்பருவம்:— நடந்து வருதலைக் கூறும் பருவம்; இது வாரானைப்பருவம் எனவும் வழங்கும்.

6. அள்ளூற - இனிமைக்கு வாயூற. சிவமாகிய ஆனந்த சோதி யென்க. புலன் - ஓசை முதலிய விடயங்கள். திருகும் உளத்தார் - மாறுபடும் மனத்தார். சேயாய் - சேய்மைக்கண் உள்ளவனே. உயிர்ப்பைங்கூழ் - உயிர்ப் பயிர்கள். முகில் - மேகம். நறும் பாகு - இனிய தேன் பாகு. வரைகிழித்த முருகவேள் - கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகக்கடவுளாகிய வேள். மூரி - பெருமை.

அம்புலிப்பருவம்:— சந்திரனை அழைத்தலைக்கூறும் பருவம்.

7. உடற்கு ஊறுபடுவெம் பாந்தள் ஒன்றனக்கு - உடலுக்கு ஊறுபட்ட வெய்ய பாம்பாகிய இராகு ஒன்றிற்கு. இராகு தலைமட்டும் உடையதாய் உடல் இல்லாதது என்பதுபற்றி உடலுக்கு ஊறுபட்டது என்றார். கேது - உடல் உள்ளது தலையில்லது என்பர். உழிதந்து - அங்கும் இங்கும் சென்று. காரி - நஞ்சு. துத்தி - புள்ளி. படக்கோளரா - படத்தை உடைய தீங்கிழைக்கவல்ல பாம்பு. 'மாசுணப் பைம்பூட்டு' என்பர். கலன் என - ஆபரணம் என. வெண்மை - வெளிற்றறிவுக்கும் வெள்ளை நிறத்துக்கும் பெயர். அகளங்க உரு - களங்கமில்லாத வடிவு. பாம்புக்கு அஞ்சுவையே என்றிரங்கி நின்னையும் அழைத்தனன். அம்புலீ - விளிவேற்றுமை.

சிற்றிற்பருவம் :—மகளிர்கட்டும் சிறு வீடுகளைச் சிதைக்காமல் இருக்க வேண்டுதலைக் கூறும்பருவம்.

8. விருந்து விளிப்போம் - விருந்துக்கு அழைப்போம். வேலை - சமயம். அடிகேள் - அடிகள் என்னும் சொல் விளிவேற்றுமையில் வந்தது. மீக்கூர்தல் - மிகவும் வளர்தல். முருந்து - மயிலிறகின் அடி. அதுபோலுளதால் பல்லுக்கு ஆயிற்று. முறுவலித்தேம் - சிரித்தோம். கரிமுகம் - யானைமுகம். பூதப் பெருவயிறு - பூதங்களுக்குள்ள பெரிய வயிறு. முடங்கும் குறட்டாள் -

வளைகின்ற குட்டைக்கால். நகுநடை - சிரித்தற்குரிய நடை. இவற்றையெல்லாம் இகழாதார்போல இகழ்ந்தவாறு நோக்குக. இருக்கு முழக்கும் - வேத ஒலியும். தேவாரத்து இசையும் - தேவாரத்தின் பண்ணும். துவன்றி - விளங்கி.

சிறுபறைப் பருவம்:—சிறுபறை முழக்குதலைக் கூறும் பருவம்.

9. மலைவு அற-விபரீதம் அற. முப்பொருள் - பதிபசுபாசம் என்னும் மூன்று பொருள்கள். தெளித்து - தெளிவித்து. பெயர்க்க முடியாமல் அதிகமாயிருத்தலால் மலையென முற்பட்டவினைக ளென்றார். உடலிடனும் அரும்பி விளங்குகின்ற சிவமான விளைவே என்க. சிவபிரானிடத்து விளைந்த விளைவு எனினும் பொருந்தும். கொட்டிய - சிந்திய. மழகளிறே - இளங்களிறே. உற்பல இறைவ - செங்கழுநீர் முதல்வ. அளவின் மிகுதிக்குக் கடல்போன்று அது போல் பேரொலியே ஆகாது இனிமையுடையதாக முழக்குக என்றார்.

சிறுதேர்ப் பருவம்:—சிறு தேரினை உருட்டுதலைச் சொல்லும் பருவம்.

10. முகைவிண்டு - அரும்பு அவிழ்ந்து. மாலையம்படலை - மாலையில் அநேகவகையாகச் செய்யப்பட்டவை. மாயோன் - மாயவன். கரியோன் எனவுங் கூறுவர். கிடக்கை - சயனமாகிய கடல். அதை உடுக்கும் புடவையாக ஆண்ட பூமிதேவிக்கு மகுடம் தொண்டைமண்டலம். அம் மகுடத்தில் பதித்த சுடர்மணி கலைசையாகிய தொட்டிக்கலைப்பதி. தழைக்க மருவு சிவபத்தர் என்றதனால் சிவபத்தர் உயர்வு குறித்தார். கண்டிகை - உருத்திராக்க மாலை. வெண்ணீறு - விபூதி. அஞ்செழுத்து - பஞ்சாட்சரம். வைதிகம் - வேதத்தின் ஆசாரம். மார்க்கம் - வழி. கரிசு அற்ற சைவம் - குற்றமற்ற சைவத்துறையும். வைதிகம் நெறி என்றதனால் சைவம் துறை என்று குறித்தார். வாங்குங் கடற்புவி - வளையும் கடலையுடைய பூமி. திண்டிமம் - ஓர்வகைத் தோற்கருவி. தாக்கும் - தாளத்திற்கேற்ப ஒலிப்பிக்கும். குறட்கணம் - கால் குறுகிய பூதகணங்கள். சிற்பரன் - ஞான மயமான மேலோன்.

IX

ஸ்ரீமத் குமார சுவாமியம்

திருக் கைலாயத் திருவிளையாடல்

ஸ்ரீமத் குமாரசுவாமியம் என்பது குமாரசுவாமி என்னும் திருநாமத்தையுடைய ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட நூலாகும். இதில் ஸ்ரீ குமரக்கடவுளுடைய அருமை பெருமைகளை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் இற்றைக்கு எண்பது ஆண்டுகட்கு முன்னர் (1850 ல்) இராமேச்சுரத்தில் அவதரித்தனர். அவருடைய தந்தையார் சாத்தப் பிள்ளை. தாயார் செங்கமல அம்மாள். இவர் முதன் முதலில் கந்தர்சஷ்டிக் கவசம் என்னும் நூலைப் பலகால்படித்து ஸ்ரீ முருகனுடைய திருவருளுக்குப் பாத்திரராகி, சேதுமாதவ ஐயரென்னும் ஆரியபிராமணர் ஒருவரைத் தமதாசிரியராகப் பெற்றனர். குருவின் ஆணையின்வழி ஸ்ரீமதி காளி முத்தம்மாள் என்பவரைத் தமது இருபத்தைந்தாவது வயதுக்குமேல் மணந்துகொண்டார். அவ்வம்மையார் இரண்டு ஆண்மக்களையும் ஒரு பெண்மகவையும் பெற்றார். இவர் இளம் பிராயத்திலேயே பாடுந்திறன் வாய்க்கப்பெற்றிருந்தார்.

பின்னர் துறவு பூண்டு சென்னையை யடைந்தார். ஆங்குப் பல மாணவர்களுக்கு நல்லுபதேசம் செய்து வந்ததோடு அநேக சாத்திர தோத்திரப்பாக்களையும் பாடினார். இவர் இயற்றிய பாடல்களின் தொகை 6666 என்பர். இவருடைய பாடல்கள் படிப்போர்க்குப் பத்தியூட்டவல்லன. இற்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன் அமலனடியைச் சேர்ந்தார்.

1. சரவணத்தடம் - சரவணப் பொய்கை. அமல நளினம் - தூய்மை பொருந்திய தாமரைமலர். மிளிர் ஞான்று - விளங்கிய பொழுது. அளக நீள்சிவை - நீண்ட கூந்தலையுடைய பார்வதி தேவியார். அவிர்கென்று - அவிர்க என்று, விளங்குக என்று.

2. அருத்தினுள் - உண்பித்தாள். அராப்பூண் ஒருத்தன் - பாம்பை அணிந்த சிவபெருமான். நவவீரர்கள் - ஒன்பது வீரர்கள். இலக்கர்கள் - இலட்சம் வீரர்கள். பிதரு அருத்தி - பின்னமில்லாத பிரியம்.

3. மாவிரு - பெருமை குன்றுத. வைசால் - கூர்மைமிக்க. திசைக்கரி - திக்கு யானைகள். உவப்பால் - களிப்போடு.

4. இன்னல் - துன்பம். பின்னமாய - சிதைவுற்ற. பிறங்குக - விளங்குக. அன்னணம் - அவ்வாறே. மாண்பு - பெருமை.

5. எழில் பிறங்கு - அழகு விளங்குகின்ற. மன்றல் மெய் - இயற்கையாகவே கடவுள் மணம் வீசுகின்ற திருமேனி. வதிதரு காலை - எழுந்தருளியிருக்கும் நாளில். கொன்றைசூடி - சிவபெருமான். குயிலுகின்ற வேள்வியில் - செய்கின்ற யாகத்தில். தகர் - செம்மறி ஆட்டுக்கடா.

6. நூபுரம் - சிலம்பு. சேவுடல் - சிவந்த உடம்பு. அண்டர் - தேவர்.

7. மிடல் மெய் சீர் அருவணம் - வலிய அதன் உடற் பொலிவு அழியா வகையில். சேய்மைதாரமேனியன் - மக்கள் அறிவிற்கு எட்டாதாகிய பிரணவத்தைத் தமது திருமேனியாகக் கொண்ட குமரக்கடவுள். இவர்ந்து - ஆரோகணித்து (ஏறி). ஏர் அருமல் - அழகு கெடாமல். ஊர்தி - வாகனம்.

8. அளியால் - மெய்யன்போடு. சொக்கு அரு - அழகு நீங்காத. ஓகை - மகிழ்ச்சி.

9. முன் குடிலை - வேதத்தின் முற்பட்டுள்ள பிரணவம். குகன் - முருகன். எவ்வம் - குற்றம். அயன் - பிரமன். உவ்வி - தலை.

10. இருந்தளை - பெரிய விலங்கு. கந்தாசலம் - கந்தகிரி. சூள் - ஆணை. அவ்வோம் கட்டதை - அப்பிரணவத்தின் உண்மைப் பொருளை. அருணையன் - அருணகிரி நாதன்.